
பக்கங்கள்-16 சித்திரை,19.2015 விலை-30.00




# தினப்புயல்

நடுநிலை இதழ்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -117



## முள்ளிவாய்க்கால் படுகொலையை திட்டமிட்டே அரசு மேற்கொண்டது - மன்னார் ஆயர்

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்வது என்பது வரலாற்றுச் சாதனை. அதுவே தமிழினத்தை குழிதோண்டிப் புதைப்பதற்கு ஒப்பானது.




## யாழ். நீர் பிரச்சினையை வைத்து அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகள்



# முள்ளிவாய்க்கால் படுகொலையை திட்டமிட்டே அரசு மேற்கொண்டது – மன்னார் ஆயர்

**முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற படு கொலைகளின் போது 146,679 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மன்னார் மறைமாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் அவர்கள் தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

**கேள்வி:–** மன்னார் மாவட்டத்தின் மறை மாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களே! தினப்புயல் பத்திரிகையின் சார்பாக வணக்கங்கள். இன்று பரவலாக பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற இனப்படுகொலைகள் தொடர்பாக, சர்வதேச மட்டத்தில் விசாரணைகள் பிற்போடப்பட்டிருக்கின்றன. எனினும் வடமாகாணசபையில் அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம்போன்றோரினால் இனப்படுகொலைகள் தொடர்பிலான பிரேரணை முன்வைக்கப்பட்டபோது அது நிராகரிக்கப்பட்டது. எனினும் அதன் பின் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் தமிழ் மக்களுக்கெதிராக இனப்படுகொலை இடம்பெற்றது என்று உறுதிப்படுத்தும் வகையில் அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இதன் காரணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கும் இடையில் சில கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. கடந்த காலங்களில் இனப்படுகொலைகள் தொடர்பில் ஊடகங்களும் சர்வதேச மட்டத்தில் தமது கருத்துக்களைக் கொண்டுசென்றன. இந்நிலையில், இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?



**பதில்:–** முதலில் வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கை 1948ம் ஆண்டு பிரித்தானிய அரசிடமிருந்து சுதந்திரம் பெற்று தனித்துவமாக இயங்கத்தொடங்கிய நாடாகும். அக்காலத்திலிருந்தே தமிழினத்தை அடக்கியாளும் நோக்கில் இனவாதிகள் இலங்கையில் செயற்பட்டனர். தமிழர்களுடைய அடையாளத்தினை அழிப்பதும் அவர்களது திட்டமாக இருந்தது. அவர்களால் தொடர்ந்தும் இனக்கலவரங்கள் உருவாக்கப்பட்டு வந்தது. 1983ம் ஆண்டு சிங்கள அரசினால் இனப்படுகொலைகள் கட்டவீழ்த்து விடப்பட்டது. அதனையே ஜூலைப்படு கொலை என்று கூறுவார்கள். ஆட்சியில் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உடனடியாக எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது, மௌனமாக இருந்தார். இக்காலகட்டத்தில் தமிழ் மக்களுடைய சொத்துக்கள், உடைமைகள் என்பன அழிக்கப்பட்டதும் ஒரு வரலாறாக பதிவாகியுள்ளது.

அக்காலகட்டத்திலே தமிழ் மக்களை ஈவிரக்கமின்றி படுகொலை செய்தார்கள். மொழி, கலாசாரம், மதம், பாரம்பரிய வதிவிடம், அவர்களுடைய பொருளாதார அமைப்புக்கள் என்பனவே ஒரு இனத்திற்குரிய தனித்துவமான அடையாளங்களாகும். தேசியம் என்ற அடிப்படையில் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் உரிமைகொண்டவர்களாக கருதப்படுகின்றனர். இவ்வாறான செயற்பாட்டையே சுயநிர்ணய உரிமை என்று கூறுகின்றோம். ஒரே நாட்டில் நாம் சுயநிர்ணய உரிமைகொண்டவர்களாக, சுய கௌரவத்துடன் வாழ்வதுதான் உலக நாடுகளில் உள்ள தேசியமாகும்.

**கேள்வி:–** இவ்வாறிருக்க அரசாங்கம் இதனை ஏன் செயற்படுத்தாது தமிழ்மக்களுக்கெதிராக வேறு விதமாக அரசியலை கட்டவீழ்த்து விட்டிருக்கின்றார்கள் ?

**பதில்:–** தேசியத்தை மழுங்கடிக்க அல்லது இல்லாதொழிக்க வேண்டும் என்பதற்காக தொடர்ந்தும் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மறைக்கப்பட்ட ஒரு திட்டமாக இனவழிப்பினையே மேற்கொண்டன. தமிழ் மக்களுடைய ஒரு அலகாக வடகிழக்கு இருக்கின்றது. இப்பகுதிகளில் மக்களுடைய காணிகளை அரசு அபகரித்துள்ளது. இங்கு பெரும்பான்மையாக வாழக்கூடிய தமிழ்மக்களது பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி, தமிழ் மக்களுடைய அடையாளங்களை அழித்து, அவர்களது இருப்பினை கேள்விக்குறியாக்கியுள்ளது. வடகிழக்கு பிரதேசத்தை பார்க்கும் பொழுது, இது தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசமா? அல்லது சிங்கள மக்கள் வாழ்கின்ற பிரதேசமா? என்றுஎண்ணத்தோன்றுகின்றது. இப்பகுதிகளில் பௌத்த விகாரைகள் புதிதாக அமைக்கப்படுகின்றன. மத ரீதியாகவும் மக்கள் மத்தியில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றார்கள். சிங்கள மக்களின் பிரதேசத்தில் காணிகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு எமது பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றுவதில் அரசு தீவிரம் காட்டுகின்றது.

**கேள்வி:–** உங்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களது பிரதேசங்களில் சிங்களவர்கள் குடியேற்றப் பட்டிருக்கின்றார்கள். இன்னமும் குடியேற்றப்படுகின்றார்கள் என்று கூறுகின்றீர்களா?

**பதில்:–** வவுனியா வடக்கில் பதினையாயிரம் குடும்பங்களை



குடியேற்றியிருக்கின்றார்கள். ஆகவே இருபத்தையாயிரம் வாக்குகள் அப்பிரதேசத்தில் இருக்கிறது. இதனால் மக்களது வாக்குகளில் தளம்பல் நிலை ஏற்படவாய்ப்புள்ளது. தமிழ் மக்களுக்கான தனித்துவம், மொழி, கலாசாரம், சமயம் என்பன இருக்கின்றது. இவற்றை சின்னாபின்னமாக்கும் நடவடிக்கைகளாக இவற்றை காணலாம். அடையாளங்களை அழிப்பது ஒரு இனவழிப்பாகும். தமிழ் மக்களுடைய இருப்பு மற்றும் அடையாளங்களை அழிக்க மறைமுகமாக செயற்பாடுகள் முன்நகர்த்தப்படுகின்றன. உதாரணமாக புத்தளம் தொடக்கம் நீர்கொழும்பு வரை எத்தனையோ தமிழ்ப் பாடசாலைகள் இருக்கின்றன. இதனை சிங்கள பாடசாலைகளாக மாற்றி, தமிழ் பிள்ளைகள் சிங்கள மொழியில் படிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் கல்வி கற்றோருக்குத் தமிழ் தெரியாது. நாற்பது ஐம்பது வருடங்களாக அப்பிரதேசத்தில் வசிக்கின்றார்கள். அவர்களும் தமிழ் மக்கள் தான். அது போன்று எமது பிரதேசங்களிலும் சிங்கள மக்களை குடியமர்த்தி, அதற்கொரு பாடசாலை அமைத்து, சிங்களத்தில் படித்தால் தான் வேலை செய்யலாம். தமிழ் படித்து என்ன செய்யப்போகின்றீர்கள்? என்று அவர்களிடம் கூறி, அவர்கள் தமிழை மறந்து போகும் அளவிற்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கேள்வி:–** மாவிலாறில் ஆரம்பிக்கப்பட்ட போர் முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்றது. இக் காலப்பகுதியிலே கொல்லப்பட்டவர்கள் இனப்படுகொலைக்குள் உள்ளடக்கப் படுகின்றார்கள். இதேவேளை தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் இனப்படுகொலையினை செய்து வந்தன. இந்த இறுதியுத்தத்தில் அதிகளவான மனிதஉரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றன. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்:–** குறிப்பாகச் சொல்லப்போனால் இதன்போது தமிழ் மக்களுக்கெதிராக இனவழிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் கல்வித் தரப்படுத்தலின் மூலம் தமிழினத்தை மட்டுப்படுத்தும் ஒரு நடைமுறை அமுலாக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தனர். ஆகவே தமிழ் மக்களுடைய இருப்பினையும், அடையாளத்தையும் இல்லாதொழிப்பதற்கு அரசு செயற்படுத்திய காரியங்களாகவே இவை அமைகின்றன.

**கேள்வி:–** உங்களுடைய கணிப்பில் மாவிலாற்றில் இருந்து தொடங்கி முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற யுத்தத்தின்போது எத்தனை பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்?

**பதில்:–** அதாவது எட்டு மாத காலத்திற்குள் இறுதிப்போரின் போது, 2008 – 2009 வரையில் மாத்திரம் 146,679 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதேநேரம் 1983–1984 காலப்பகுதிகளில் விடுதலைப்புலிகள் இராணுவத்திற்கு எதிராக தாக்குதல்களை நடாத்த, அதன் காரணமாக அப்பாவி தமிழ் மக்களை ஈவிரக்கம் இன்றி அரசு படுகொலை செய்தது. இவ்விடயம் தொடர்பாக தகவல்கள் இல்லை. உயிரோடு இருக்கிறவர்கள் தப்பித்துக்கொள்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படவில்லை. தொடர்ச்சியாக வந்த அரச அதிகாரிகள் இந்த இனச் சுத்திகரிப்பையே மேற்கொண்டனர். இதனையே அடையாள இனப்படுகொலை என்று கூறுகின்றோம். நேரடியாகவும் இனப்படுகொலைகள் அரங்கேறின. குறிப்பாக இறுதி யுத்தத்தின்பொழுது மாத்திரம் 146,679 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அப்பகுதியில் வாழ்ந்த மக்களின் அடிப்படையிலேயே இத்தரவு உருவாக்கப்பட்டது. இதை விடவும் யுத்தசூனியப்பிரதேசத்தில் இருந்து மக்கள் வந்ததொகையும் இருக்கின்றது. இதிலும் பலர் கடத்தப்பட்டும், காணாமற்போயுமுள்ளார்கள் என்பதே வெளிப்படையான உண்மை.

**கேள்வி:–** ஆனால் இவ்விடயத்தை மேற்குலக நாடுகளுடன் இணைந்து போர்க்குற்றம் என அரசு கூறுகின்றதே?

**பதில்:–** ஆம். ஐ.நா அறிக்கையின் படி யுத்தக்குற்றம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதிலும் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் பதிவாகியுள்ளன. இறுதி யுத்தத்தில் தமிழ் மக்களுடைய அடையாளங்களை அழித்தார்கள் என்பது நிரூபணமாகியுள்ளது. இதனால் பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளார்கள். இனிவரும் காலங்களில் கூட எமக்கு நிம்மதியான வாழ்வு அமையப்போவதில்லை என்பதை மக்கள் அறிவார்கள். சிங்கள–தமிழ் மக்கள் இணைந்திருந்தால் மாத்திரமே அது சமவுரிமை எனக்கூறப்படுகின்றது. அதுமட்டுமல்லாது விகிதாசார அடிப்படையில் தான் தமிழ் மக்களுக்கான வேலைவாய்ப்புக்களும் வழங்கப்படுகின்றது. குறிப்பாகச் சொல்லப்போனால் 100 நபர்களுக்கான அரச வேலைவாய்ப்புக்கள் வழங்குவதாகவிருந்தால், அதில் தமிழர்கள் 5 விகிதம், முஸ்லீம்கள் 5 விகிதம் என்ற அடிப்படையில்தான் வழங்கப்படுகின்றது. இனம் அல்லது மொழியினைக்கொண்டு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படலாகாது. தகுதியுடையவர்களுக்கே இவ் வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும். ஆகவே ஐ.நாவால் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுவருகின்றது. 13வது திருத்தச்சட்டம் என்பதும் எமக்கு பயனற்றது. ஒற்றையாட்சியின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ளமுடியாது.. எல்லாவற்றுக்கும் அரசியல் சாசனத்தில் மாற்றம் தேவை. தமிழ்மக்களை இவர்கள் ஒட்டுண்ணிகளாக பார்க்கின்றார்கள். அவ்வாறில்லை. இவ்வாறான நிலை தொடருமாகவிருந்தால் தொடர்ந்தும் இனப்படுகொலைகளும், இனவழிப்புக்களும் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

**கேள்வி:–** தொடர்ந்து வந்த இலங்கையின் ஆட்சியாளர்கள் டட்லி சேனாநாயக்கா–மஹிந்த ராஜபக்ஷ வரையான அனைவருமே இனப்படுகொலையினையே மேற்கொண்டனர். தற்போதைய அரசாங்கம் ஒரு கூட்டரசாங்கம். அரசாங்கம் இதனை போர்க்குற்றம் தான் இனப்படுகொலை அல்ல எனக்கூறி, வேறுதிசையில் மாற்ற முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது. இதனை இனப்படுகொலை என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மற்றும் ஏனைய அமைப்புக்கள் அடங்கலாக ஐ.நா சபையிலும் வலியுறுத்துகின்றார்கள். தற்போதைய அரசாங்கம் இதனை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:–** இனப்படுகொலைக்கு அத்திவாரம் யாப்பு. அதாவது இந்த அரசியலமைப்பு. இதனை முதலாவதாக மாற்றவேண்டும். அரசாங்கம் இதனை மேற்கொள்வதற்கு ஒருபோதும் அனுமதிக்காது. ஆளுந்தரப்பு மற்றும் எதிர்க்கட்சியினர் இதனை ஓரங்கட்டியே வருகின்றனர். குறிப்பாகச் சொல்லப்போனால் தென்னிலங்கையில் இருக்கின்ற தமிழ் மக்கள் காணிகளை விலைக்கு பெற்றே வசிக்கின்றார்கள். பலாத்காரமாக அவர்கள் குடியிருக்கவில்லை. தமிழர்களை தென்னிலங்கையில் குடியேற்றிய வரலாறு இருக்கின்றதா? இல்லை. இதைத்தான் இன அழிப்பின் வெவ்வேறு வடிவங்கள் எனக் கூறுகின்றோம்.

12ஆம் பக்கம் பார்க்க...

**நேர்காணல் :– இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## பாராளுமன்றத் தேர்தலுக்காக பலப்படுத்தப்படும் கட்சிகளும், தொண்டர்களும்

இலங்கையில் விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்து 05 ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையிலும், தற்பொழுது ஒரு சமாதான காலம் நிலவுகின்றது என அரசு தெரிவித்துவருகின்ற பொழுதிலும், வடமாகாணசபை உருவாக்கப்பட்டு அதனூடாக பல செயற்றிட்டங்கள் மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. எனினும் இன்னமும் வடமாகாண சபைக்குரிய அதிகாரங்கள் முழுமையாக அரசினால் வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்காக கட்சிகளும், தொண்டர்களும் தங்களை வளர்த்துக்கொள்வதில் தீவிரம் காட்டிவரும் அதேநேரம், அற்ப சொற்ப விடயங்களுக்காக தமிழ்மக்களின் மீது அக்கறைகாட்டுவதைப்போன்ற நாடகத்தினை அரங்கேற்றுகின்றனர்.

வடமாகாணசபையில் கல்வி, விவசாயம், பொருளாதாரம், போக்குவரத்து, வர்த்தக வாணிபம், மீன்பிடி போன்ற பலதுறைகள் நடைமுறையில் இருக்க, அதனையும் தாண்டி புதிய கட்சிகள் முளைக்க ஆரம்பித்துவிட்டது. இதனை அரசு தமக்குச் சாதகமாகப்பயன்படுத்திக்கொண்டிருக்கும் அதேநேரம், இருக்கின்ற பிரதான தமிழ்க்கட்சிகள் தமக்குள்ளே முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன. மறுபக்கத்தில் ஐ.தே.கட்சி இலங்கைவாழ் தமிழ்மக்களுக்கு சுமுகமான தீர்வுகளை பெற்றுக்கொடுப்போம் எனக்கூறுவதுடன், பாராளுமன்றத் தேர்தலிலும் அவர்கள் சார்பாக தமிழ்வேட்பாளர்கள் களமிறக்கப்படவுள்ளனர்.

இந்நிலையில் தமிழ்மக்களுடைய வாக்குகள் சிதறிப்போவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்கின்ற கோட்பாட்டுடன் இருக்கும் த.தே.கூட்டமைப்பிற்கு இதுவொரு சவாலாக இருப்பதுடன், தமிழ்மக்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது. அண்மையகாலமாக த.தே.கூட்டமைப்புக்கெதிராக அதிலும் உறுப்பினர்களின் கொடும்பாவி எரிப்புச்சம்பவங்கள் தமிழினத்தையே கூறுபோடும் சம்பவங்களாக பதிவாகின்றன. இதனை தமிழ்பேசும் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். காலத்தின் தேவைகருதி அரச தரப்பிலுள்ளவர்கள் கூட விட்டுக்கொடுப்புக்களை ஏற்படுத்தி, மஹிந்தவின் அரசினை தோற்கடிக்குமளவிற்கு அவர்களது செயற்பாடுகள் மேலோங்கியிருக்கின்றது. ஆயுதமேந்திப்போராடிய ஆயுதக்குழுக்கள் அனைத்தின் ஆரம்பநிலையினை பார்க்கின்றபொழுது ஒரே கொள்கை, இலட்சியம் என்ற ரீதியிலே காணப்பட்டது. காலப்போக்கில் அது வலுவடைந்து சகோதர அழிப்பாக தோற்றம் பெற்றதன் காரணமாக மேற்குறிப்பிடப்பட்ட இயக்கங்கள் அனைத்தும் பிரிந்துசென்றன.

அதன்பின்னர் 2001-2002 காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் அனைத்து தமிழ்க்கட்சிகளையும் ஒன்றுதிரட்டி, த.தே.கூட்டமைப்பு என்ற கட்சி தோற்றம் பெற்றது. அதுவே இன்றுவரை த.தே.கூட்டமைப்பாக இருக்கின்றது. அரசியல் நீரோட்டத்திற்கேற்ப த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் செயற்பட்டாலும் கொள்கை அளவில் மாற்றம் பெறாது செயற்படுவதே சிறந்தது. பல்வேறு பேச்சுக்களில் ஈடுபட்ட த.தே.கூட்டமைப்பு இதுவரை காலமும் பொறுமையைக் கடைப்பிடித்து தமது செயற்பாடுகளை முன்னெடுக்கிறது. போராட்ட காலம் மற்றும் தற்போதைய நிலையிலும் தமிழரசுக்கட்சியினது செயற்பாடுகள் மாற்றம் எதுவுமின்றி காணப்படுகின்றது. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலானது தமிழ், சிங்கள மக்கள் மத்தியிலும் திருப்புமுனையாக அமையப்போகின்றது என்பதில் சந்தேகமில்லை. தமிழ்மக்கள் மத்தியில் ஒற்றுமையை சீர்குழைப்பது மட்டுமல்லாது, தமிழ்க்கட்சிகளிடையே பிரிவினைகளை ஏற்படுத்துவதிலும் தற்போதைய அரசு மிக வேகமாக செயற்படுகின்றது. இதில் யார் விலைபோகப்போகிறார்கள் என்பது தேர்தல் காலங்களில் மாத்திரமே தெரியவரும். மற்றுமொரு விடயம் இதைக்காரணமாகக் கொண்டு த.தே.கூட்டமைப்பை பதிவுசெய்யும் நடவடிக்கையில் ஏனைய கட்சிகள் தீவிரம் காட்டிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



45

படை[illegible] நுண[illegible] பட[illegible]ரிய படித்[illegible]க்கொ[illegible]ண்[illegible] நா[illegible] இளை[illegible] பா[illegible] ளகள[illegible] சிறு[illegible]ர்க[illegible] நிலை[illegible]பக்[illegible]டந்[illegible] இளைஞர்களாகியவர்கள் [illegible]லெ[illegible]. கேணல் சந்தோசம் படை[illegible]யணி[illegible]யாக[illegible] தோற்றம்கொண்டு, கிளிநொச்சி நகரில் எமக்கு வலதுபுறம் நின்ற லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கும் அப்பால் நிலையமைத்திருந்தார்கள்.

1999 தை மாத முடிவில் சந்தோசம் படையணி கலைக்கப்பட்டு, பெண் போராளிகள் எங்களின் படையணியுடன் இணைக்கப்பட்டனர். இளவயதிலேயே போர் நுணுக்கங்களைப் பாடமாகக் கற்றவர்கள் இப்போது களஅனுபவம்மிகுந்த எமது படையணியிடம் நேரடி அனுபவங்களைக் கேட்டறிந்து, தமக்கிருந்த ஐயங்கள் பலவற்றைத் தெளிவாக்கிக்கொண்டனர்.

எங்களுடைய பிளாட்டூன் கட்டளை அதிகாரிகளுள் ஒருவரான மேஜர் மிதுலா, குறும்புத்தனமும் இளவயதுக்கேயுரிய பிடிவாதமும் நிறைந்த முன்னாள் படைத்துறைப் பள்ளி மாணவர்களின் பிளாட்டூன் பொறுப்பாளராக கேணல் விதுஷாவினால் விடப்பட்டார். மிதுலாவும் ஆரம்பநாட்களில் படைத்துறைப் பள்ளி மாணவியாக இருந்து ஏற்கனவே இவர்களால் அறியப்பட்டவரும், இவர்களின் இயல்பை அறிந்தவரும் என்பதால், அந்தக் குறும்புக்காரர்களைக் கையாளக்கூடிய மிகச் சரியான பொறுப்பாளராக அவர் இருந்தார். இதே காலகட்டத்தில் எமது விடுதலை அமைப்பு வித்தியாசமான ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டது. எமது அமைப்பிடம் படையியல் பயிற்சிகளைப் பெற்று, பின்னர் வெவ்வேறு காரணங்களுக்காக வீடுகளில் நின்ற எல்லோருக்கும் ஒரு அழைப்பை விடுத்தது.

அழைப்பை ஏற்று எல்லோரும் ஒன்று கூடினர். எமைச் சூழ்ந்திருக்கும் இராணுவ நெருக்கடி அவர்களுக்கு விளக்கப்பட்டது. அதை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக வேண்டிய தேவை விளக்கப்பட்டது. எமது படைப்பலத்தை அதிகரிப்பதற்கு அவர்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டது. பலர் இணைந்து கொண்டனர். பெண்கள் 5.0 படையணியானார்கள். மைதிலியின் கொம்பனியின் பொறுப்பாளராக இருந்த ஜமுனா, மணலாற்றில் தங்கி நின்ற இவர்களைப் பொறுப்பேற்றார். கப்டன் அங்கயற்கண்ணி, லெப். அகலரசி என ஆற்றல் மிக்க போராளிகள் பலர் 5.0 அணியிலிருந்தார்கள். கொம்பனியின் இரண்டாவது பொறுப்பாளராக மேஜர் மாலதி செயற்பட்டார்.

ஜமுனா, மாலதி ஆகியோருடன் [illegible]ம்[illegible]மப் வந்த 5.0 அணியினர் மைதிலி[illegible]ன் கொம்பனியின் இடது புறமாகத் [illegible]மது தொடர்நிலைகளை அமைக்கும் [illegible]ணியில் ஈடுபடத்தொடங்கினர். [illegible]தற்கிடையில் கிளிநொச்சியில் நின்ற [illegible]தர்ச[illegible]வின் கொம்பனி தமிழ்செல்வி தலைமையில் மன்னார் மாவட்டத்துக்கும், முல்லையின் கொம்பனி ஆஸாவின் தலைமையில் மணலாற்றுக்கும் சென்றுவிட்டிருந்தது. படைத்தரப்பினர் சூரியபலம் (ரிவிபல) நடவடிக்கை மூலம் எம்மை எதிர்கொள்ளாமல் விலகி, நெடுங்கேணியிலிருந்து முன்னேறி ஒட்டுசுட்டான் நகரை வலிந்து பிடித்து, ஒட்டுசுட்டான்-மாங்குள வீதியைத் தமது கட்டுப்பாட்டிலே வைத்திருந்தனர். அவர்களின் அடுத்த நகர்வைக் கட்டுப்படுத்தும் பணியில் மைதிலியுடையதும், ஜமுனாவினுடையதும் கொம்பனிகள் ஈடுபட்டிருந்தன.

போர் முழக்கம் (ரணகோச) 01,02 நடவடிக்கை மூலம் எம்மை எதிர்கொள்ளாமல் யாழ் நெடுஞ்சாலைக்கு வலதுபுறம் பக்கவாட்டாக விலகி பனங்காமம், மாதர் பணிக்கர் மகிழங்குளம், பாலமோட்டை, குஞ்சுக்குளம், நவ்வி, நட்டாங்கண்டல், மன்னார் மாவட்டத்தில் மடு, ஆட்காட்டிவெளிஎன்றுபலஊர்களைப் படையினர் வலிந்து பிடித்திருந்தனர். இவர்களின் அடுத்த நகர்வைக் கட்டுப்படுத்தும் பணி தமிழ்செல்வியின் கொம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. மணலாற்றுக்காட்டினுள்ளேபடையினரின் தன்னிச்சையான நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஆஸா, முல்லை ஆகியோரின் கொம்பனிகள் காவல் நிலைகளை அமைக்கத் தொடங்கின. களமுனைகள் நாலா திசைகளிலும் பரந்து விரிந்ததால், மாலதி படையணியின் கொம்பனிகள் திசைக்கொன்றாகச் செயற்படவேண்டியிருந்தது. நெருக்கடி மிகுந்த களங்களிலெல்லாம் எங்கள் படையணி படைத்தரப்புக்கு ஒரு சவாலாகவே இருந்து வந்தது.

மிகநீண்ட பயணம். அது குண்டுங் குழியுமாக இருக்கின்ற எங்கள் அழகிய மண் வீதிகளில் கிளிநொச்சியிலிருந்து மன்னார் போவதென்றால், அது சாதாரண விடயமல்ல. ஆடி ஆடிப் பயணம் செய்த ஊர்திகள் பள்ளமடுச் சந்தியில் திரும்பும் போது விடியத்தொடங்கிவிட்டது. பரந்த வெளி, பிறகு ஒரு சிறு குடிமனை. பின்னர் வெளி அல்லது காடு, பிறகு ஒரு குடிமனை என்றவாறிருந்த மன்னாரின் தோற்றம் எங்களைச் சற்று மிரட்டித் தான் விட்டது. மன்னார் ஒரு வறள் வலயம் என்றும், உணவுத் தொகுப்பின் போது அதிக நீரிழப்பைத் தவிர்ப்பதற்காகச் சிறு இலைகளைக் கொண்ட தாவரங்களே வளரும் என்றும் பாடசாலை நாட்களில் படித்திருந்தாலும் நேரில் பார்க்கும் போது பயம்ஏற்படாமலில்லை. கண்ணுக்கெட்டிய தொலைவு வரை விடத்தல் மரங்கள் தெரிந்தன. இப்போது மாசி மாதம். இலைகளோடு மரங்கள் நிற்பது பார்வைக்கு இதமாக இருந்தாலும், அடுத்த மாதம் கொழுத்தி எரிந்து இலைகளை உதிர்த்து, வறுத்துப் பொரிக்கப்போகும் வெயிலை நினைத்துப் பயப்படாமல் இருக்க முடியவில்லை.

படையினரின் போர் முழக்கம்-3 நடவடிக்கை எந்தத் திசைவழி நகரும் என்று தெரியவில்லை. எனினும் நகரலாம் என எதிர்பார்க்கக்கூடிய மூன்று முக்கிய முனைகளிலும் எங்களுடைய மூன்று பிளாட்டூன்களும்பிரிந்துநிலைகொண்டன. மடு-முருங்கன் வீதியில் தனுசாவின் பிளாட்டூனுடன் கொம்பனிப் பொறுப்பாளர் தர்சாவும், பரப்புக்கடந்தானில் மிதுலாவின் பிளாட்டூனுடன் கொம்பனி பதில் பொறுப்பாளர் சாந்தகுமாரியும், தட்சணாமருதமடு-பெரியமடு வீதியருகே இளம்பிறையின் பிளாட்டூனுடன் கொம்பனி மேலாளர் சாந்தகுமாரியும், தட்சணாமருதமடு-பெரியமடு வீதியருகே இளம்பிறையின் பிளாட்டூனுடன் கொம்பனி மேலாளர் தமிழ்செல்வியும் காப்பு நிலைகளை அமைத்தனர். இப்போது மூன்று பிளாட்டூன்களுமே ஒன்றுடன் மற்றது தொடர்பற்ற தொலைவுகளில் நின்றன. யாருக்கு நேரே படைநகர்வு வருகின்றதோ, அவர்கள் தம்மிடமுள்ள வளத்துக்கும் . தமது பலத்துக்குமேற்ப சண்டையிடுவதற்குத் தயாராகினார்.

எங்களுக்கு மன்னாரைத் தெரியாது. எமக்கு உதவுவதற்காக மன்னாரிலேயே நிற்கும் கேணல் ஜெயம் அவர்களின் அணியிலிருந்து சில வழிகாட்டிகள் வந்து ஒவ்வொரு பிளாட்டூன்களுடனும் நின்றுகொண்டார்கள். ஒவ்வொரு பிளாட்டூனும் ஒவ்வொரு நாளும் கணிச மானளவு தூரம் நடந்து இடம்பார்க்கும். எங்கே சண்டை நடக்கும் என்று ஒருவருக்கும் தெரியவில்லை. எனினும் காப்பரண்கள் அமைக்கும் வேலையும் நடந்து கொண்டுதானிருந்தது. இடம் பார்க்கப் போகின்றவர்களெல்லோருக்கும் உடைகளுக்கு வெளியே தெரிகின்ற கைகாலெல்லாம் ஒரே கடி. ஒருவருக்கும் காரணம் புரியவில்லை. இரண்டு, மூன்று நாட்களின் பின் பொறுக்கமுடியாமல் வழிகாட்டிகளிடம் விடயத்தைச் சொன்னார்கள்.

"காஞ்சோண்டியில் முட்டீட்டிங்கள்போல இருக்குது"
என்றார்கள் அவர்கள்.

"எது காஞ்சோண்டி?"
காட்டினார்கள். அட, அநியாயமே! இதுவா காஞ்சோண்டி? முன்னே போய்க்கொண்டிருக்கும் வழிகாட்டிகள் அவற்றிலே முட்டாமல் மோதாமல் இலாவகமாக வளைந்து நெளிந்து போக, நாங்களோ அதைப் புரிந்து கொள்ளாமல் ஒரு காஞ்சோண்டியையும் மிச்சம் விடாமல் உரசி உரசி கைகளால் தொட்டு விலக்கி இயற்கை மீது எங்களுக்கிருக்கும் பேரன்பை வெளிப்படுத்தியவாறு சென்றால், கடிக்காமல் வேறென்ன செய்யும்? பட்டால் கடிக்கும் என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். இது தான் அது என்று தெரிந்தாலல்லவா விலகிப் போவதற்கு?

தொடர்வான்...

தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 242. | மேஜர்.சௌதினி | ரோகினி துரைராஜா | யாழ்ப்பாணம் | 1997.08.20 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 243. | வீ.வே.யாழ்மொழி | சிவகௌரி முருகையா | கிளிநொச்சி | 1997.08.22 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 244. | வீ.வே.அருள்மதி | ஜெயமதி தியாகராஜா | யாழ்ப்பாணம் | 1997.08.24 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 245. | கப்டன்.கோகிலா | மைதிலி ராஜேந்திரம் | யாழ்ப்பாணம் | 1997.08.26 | புளியங்குளம் ஜெயசிக்குறுய் |
| 246. | லெப்.வதனி | திலீப்குமாரி குமாரவேல் | யாழ்ப்பாணம் | 1997.09.08 | கல்யாணபுர |
| 247. | கப்டன்.நாதினி | கேதீஸ்வரன் காத்தவராயன் | மன்னார் | 1997.09.08 | கல்யாணபுர |

# விடுதலைப்புலிகளுக்கு நான்கு பெரிய வெற்றிகளைப் பெற்றுத்தந்த ஈழப்போர்



யுத்த வரலாற்றில் பூகோள ரீதியாக இலங்கையை நோக்கும் பொழுது, ஆசிய பிராந்தியத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளக்கூடிய திருகோணமலை இயற்கை துறைமுகம் இலங்கையில் காணப்படுவதே சர்வதேசத்திற்குப் பிரச்சினையாகும். அது மட்டுமல்லாது சர்வதேசரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகளை உற்றுநோக்கும் பொழுது, அவர்களுடைய போர்த்திறன் பரிணாம வளர்ச்சிகண்டமை குறிப்பிடத்தக்கது. தமிழீழ விடுதலைப்புலிகள் சிங்கள அரசிற்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர். இதில் நான்கு சமர்க்களங்கள் மிக முக்கியம் வாய்ந்தது. இந்த பரிணாம வளர்ச்சியைக் கண்ட சர்வதேசம், தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என்பதில் தீவிரம் காட்டியது. அல்பா, டெசி, டெல்டா, றோமியோ போன்ற சர்வதேச தொடர்பாடல் மொழிகள் (வோக்கி டோக்கி) குறியீடுகளை துல்லியமாகப் பயன்படுத்தி நடத்தப்பட்ட நான்கு தாக்குதல்களின் மூலம் விடுதலைப்புலிகள் முக்கியத்துவத்தைப் பெற்றனர். இத்தாக்குதலானது முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவே ஆச்சரியப்படும் அளவிற்கு அமைந்திருந்தது.

யுத்தத்தின் இறுதி வருடங்களில் இடம்பெற்ற ஒவ்வொரு அங்கத்தையும் வெளிப்படையாக அவர் போட்டுடைத்தார், அவற்றை கூறுகையில் இராணுவத்தின் வெற்றிக்குப் பின்னால் மறைந்துள்ள உண்மைகள் என்று அவர் தெரிவித்த சிலவற்றையும் அங்கு வெளிப்படுத்தினார். அப்போது இருந்த அரசியல் சக்திகள் தங்கள் குறுக்கீடுகள் மூலம் யுத்தக்களத்தில் பின்னடைவுகளையும் அதேபோல உயிரிழப்புகளையும் எப்படி ஏற்படுத்தின என்பதையும் அவர் தெரியப்படுத்தினார். அவரது உரையின் ஆரம்பத்தில், எல்.ரீ.ரீ.ஈயின் முழு இராணுவ தகுதிகளையும், அதேபோல இராணுவ நபர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை இலக்குவைக்கும் அவர்களது வியூகத்தையும் தெளிவாக விளக்கினார்.

பின்னர் அவர் ஸ்ரீலங்கா இராணுவத்தின் தகுதிகளை விவரிக்கத் தொடங்கிய வேளையில் யுத்தம் முழுவதும் யுத்த தளபாடங்கள் ஆட்சேர்ப்பு மற்றும் யுத்த மூலோபாயங்கள் உட்பட முகங்கொடுக்க வேண்டியிருந்த பல சவால்களை அவர் பிரதானப்படுத்திக் காண்பித்தார். அவர் மேலும் ஈழப்போர் -1,4 இற்கு இடையேயான காலக்கிரமமான நிகழ்வுகளைப் பற்றி விபரித்த போது, இராணுவ மூலோபாயம் மற்றும் இராணுவத்திலுள்ள வருடக்கணக்கான குறைபாடுகளை வெளிச்சம் போட்டுக்காண்பித்தார். தான் இராணுவத்தை பொறுப்பேற்றபோது, தேவைப்படும் இலக்கு எதிரியிடமிருந்து நிலத்தை கைப்பற்றுவதிலிருந்து அவர்களை நிர்மூலமாக்க வேண்டியதை நோக்கி முற்றாகத் திரும்ப வேண்டும் என உணர்ந்ததாகத் தெரிவித்தார்.

“என்னுடைய விடயத்தில் நாங்கள் பயங்கரவாதிகளை அழித்தால் நிலங்கள் எங்கள் கைகளில் தானாகவே வந்துவிழுவதற்கு வழியமைக்கும் என்பதை நான் உணர்ந்திருந்தேன். நான் எப்போதும் பயங்கரவாதிகளை அழிப்பதற்கே முன்னுரிமை வழங்கி தன்னிச்சையாக நிலங்கள் எங்கள் கைகளில் வருவதை யதார்த்தமாக்கியிருந்தேன்” என அவர் தெரிவித்தார். அவர் தெரிவித்தது இந்த இலக்கை மாற்றியது, கொழும்பிலுள்ள அரசியல்வாதிகளின் இலட்சியங்களுடன் எப்போதும் ஒத்துவரவில்லை, ஏனெனில் இதன் காரணமாக சிலவேளைகளில் யுத்தம் ஒரு குறிக்கப்பட்ட காலத்துக்கு நீட்டிக்கப்படலாம் என அவர்கள் நினைத்தார்கள். அப்போதிருந்த கட்டளைத் தலைவரும் அவரின் “பிரபலமான சகோதரரும்” தங்களது



பொறுமையின்மையை தொடர்ச்சியாக என்னிடம் தொடர்புகொண்டு தெரிவித்து வந்தார்கள். ஆனால் தான் நிலங்களை கைப்பற்றுவதில்லை. எல்.ரீ.ரீ.ஈ படையினை சிறிதாக்குவதே முக்கியம் என உறுதியாக இருந்தேன். ஜெனரல் சுட்டிக்காட்டியது, தான் இராணுவத்தை கையேற்றபோது அதன் பலம் 116,000படை வீரர்களாக இருந்தது. அனுமதிக்கப்பட்ட தொகை 132,000 ஆக இருந்த போதிலும் இராணுவத்தால் அதன் வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் இருந்தது. எனினும் யுத்தம் நிறைவடைந்த வேளையில் அந்த தொகையுடன் மேலும் 86,000 பேரை கூட்டும் அளவுக்கு படை வீரர்களின் எண்ணிக்கை உயர்ந்திருந்தது.

ஜெனரல் பொன்சேகா தெரிவித்தது, ஸ்ரீலங்கா இராணுவத்தின் பலத்துக்கு சமாந்தரமாக எல்.ரீ.ரீ.ஈயின் பலமும் உயர்ந்தது, வெறும் 15 பேருடன் ஆரம்பித்த அதனது ஆட்சேர்ப்பு அதன் அணியில் 35,000 பேரைக் கொள்ளும் அளவுக்கு உயர்ந்து நின்றது. பிள்ளையான் மற்றும் கருணா போன்ற முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களை முன்னாள் அரசாங்கம் ஏற்றுக்கொண்டதை கவனயீர்ப்பு செய்யும் விதமாக அவர் சொன்னது “நான் எனது கடமைகளை கையளித்தபோது நாட்டில் இருந்த எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் எண்ணிக்கை பூச்சியமாக இருந்தது. உண்மையில் நான்கு பேர் எஞ்சி இருந்தார்கள், அவர்கள் அப்போது நாட்டின் தலைவராக இருந்தவரால் பாதுகாக்கப்பட்டார்கள்” என்று அவர் சொன்னார். ஜெனரலின் கூற்றுப்படி, எல்.ரீ.ரீ.ஈ நான்கு மிகப் பெரிய வெற்றிகளைப் பெற்றிருந்தது: 1991ல் ஆனையிறவில் இருந்த படையணிமீது தாக்குதல் நடத்தியது, 1996ல் முல்லைத்தீவு படைப்பிரிவின்மீது தாக்குதல் நடத்தியது, அங்கு அவர்கள் சுமார் 1,500 வீரர்களை துடைத்து அழித்தனர், 1996ல் கிளிநொச்சி படைப்பிரிவு மீது தாக்குதல் நடத்தியது, 1999ல் வவுனியா மற்றும் மாங்குளம் இடையே நிலைகொண்டிருந்த நான்கு பிரிவு துருப்புக்களை தாக்கியது.

இறுதி தாக்குதலில் எல்.ரீ.ரீ.ஈக்கு முடிவுகட்ட இரண்டு வாரங்களே பிடித்தது, அதேசமயம் அந்த நேரத்தில் இழந்த இடங்களை திருப்பிக் கைப்பற்ற இராணுவத்திற்கு கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் பிடித்தன. 2000 ஆம் ஆண்டு ஆனையிறவில் இருந்த இரண்டு பிரிவுகளின் தளத்தை எல்.ரீ.ரீ.ஈ கைப்பற்றியது, அதுதான் அவர்கள் ஒரு இராணுவ முகாமை கைப்பற்றிய கடைசி சந்தர்ப்பம். “அந்த நேரம் இராணுவத்தின் மன உறுதி மிகவும் குறைவாக இருந்தது. நாங்கள் புறங்காட்டி ஓடிக்கொண்டிருந்தோம் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ மிகவும் திறமையாகச் செயற்பட்டு நாட்டில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது” என்றார் அவர். எல்.ரீ.ரீ.ஈயின் ஆயுத பலம் மற்றும் நீரிலும் அதேபோல ஆகாயத்திலும் அதன் திறமைகளை சுருக்கமாக விளக்கிய ஜெனரல், அந்தப் பயங்கரவாத குழுவால் இராணுவத்திற்கு அடிக்கு அடி வழங்க இயலுமாக இருந்த அதேவேளை, கொடிய தாக்குதல்களை நடத்தவும் அரசாங்க கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்குள் இலகுவில் ஊடுருவும் அளவுக்கு பலமும் இருந்தது.

“ஒரு இடத்தில் நீங்கள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களுக்கு பாராட்டு வழங்க வேண்டும், தங்களிடம் கடைசி மணிதன் மற்றும் கடைசி ரவை மீதமாக உள்ளவரை அவர்கள் போராடினார்கள். அவர்கள் மிகவும் ஊக்கமுள்ளவர்களாக இருந்தார்கள். திரும்பி ஓடுவதில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. உண்மையில் அவர்களால் திரும்பி ஓட முடியாதிருந்தது, ஏனென்றால் அவர்கள் அப்படிச் செய்திருந்தால் அவர்களின் தலைவர்களால் சுடப்பட்டிருப்பார்கள்” என்றார் அவர். அவர் மேலும், இராணுவ மற்றும் காவல்துறை புலனாய்வு பிரிவுகள் திறமையில் எல்.ரீ.ரீ.ஈயின் உளவுத்துறைக்கு முன்னால் கிட்ட நெருங்கவே முடியாது, அதற்கு பல உதாரணங்களைச் சொல்லலாம், பயங்கரவாதிகள் அரசாங்க நிறுவனங்கள் அதேபோல முன்னணி அதிகாரிகள் ஆகியவற்றில் எவ்வளவு சுலபமாக ஊடுருவியிருந்தார்கள்.

### யுத்தத்திற்கு முன்னதான தயாரெடுப்பு

ஜெனரல் சரத் பொன்சேகா 2006ல் இராணுவத்தை கையேற்றார். ஆனால் அதற்கு வெகுகாலத்துக்கு முன்னரே அவர் தவிர்க்க முடியாத இறுதி மோதலுக்கு தன்னை தயார்படுத்தியிருந்தார். 2002ல் அவர் யாழ்ப்பாண தளபதியாக இருந்தார். ஆனால் அந்தக் கட்டத்தில் நாடு மீண்டும் யுத்தத்தில் ஈடுபட்டால் இராணுவத்திற்கு தலைமை தாங்க தன்னைவிட சிறப்பான மூத்த அதிகாரிகள் எவரும் படையில் இருக்கவில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். சமாதானம் பற்றிய பல்வேறு வாக்குறுதிகள் அந்த நேரத்தில் ஜனாதிபதியால் அவரது மஹிந்த சிந்தனை வெளியீடு ஊடாக வழங்கப்பட்ட போதிலும் அவையாவும் தோல்வியடையும், யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கும் என்பதை தான் அறிந்திருந்ததாக அவர் சொன்னார். “நான் பயிற்சி எடுக்கவும் மற்றும் வியூகங்களை தயார் செய்யவும் ஆரம்பித்தேன். முதலாவதாக நான் வடக்கில் பாதுகாப்பை தயார் செய்ய ஆரம்பித்தேன். ஒரு நீடித்த போருக்கு தயாராக இருக்கவேண்டி இருந்தது. இராணுவ மூலோபாய விதிமுறைகளுக்கு ஏற்ப நான் சவால்விட வேண்டியிருந்தது” என்று அவர் கூறினார்.

உருவாக்கத்தில் ஒரு மாற்றம் மற்றும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் நடைமுறை நெறிகளில் இருந்து ஒரு விலகல் என்பனதான் ஜெனரல் கவனம் செலுத்திய முதல் விடயம். இராணுவம் பாரிய இழப்புக்களை சந்திக்க வேண்டியிருந்தது ஏனென்றால் அவர்கள் பெரும்பாலும் பிரதான சாலைகளைப் பயன்படுத்தி குறுகிய வரைகளில் தான் முன்னேறினார்கள், அதற்கான காரணம் படைகள் விநியோக ஆதரவில் அதிக கவனம் செலுத்தியதுதான். “பயங்கரவாதிகளின் மனித வலுவையும் மற்றும் சுடுதிறனையும் கலைக்க வேண்டுமாயின் நாங்கள் 15-20 கி.மீ அகலமான பரந்த முன்னிலையில் முன்னேறவேண்டும் என்பதை உணர்ந்தோம்”

இது இராணுவத்தை எதிரியுடன் பரந்த பரப்பளவில் ஈடுபாடு நடத்த உதவியது. அதன் கருத்து எதிரியின் வரை கணிசமானளவு குறுகியது என்பதுதான். ஸ்ரீலங்கா இராணுவத்தின் பெரும் எண்ணிக்கையுடன் இந்த வியூகம் அதன் இழந்த பகுதிகளை திரும்ப கைப்பற்றும் திறனை பெருமளவு மேம்படுத்தியது. இது தளபதிக்கு தனது பலம் அனைத்தையும் ஒரே இடத்தில் செலுத்தாமல் தனது படைப்பிரிவை பல பகுதிகளிலும் ஒரே நேரத்தில் ஈடுபடுத்தக்கூடியதாக இருந்தது. படைத்தளத்தின் முக்கியமான பிரதேசங்களுக்கு வாராந்தம் வருகை தருவதன் மூலம் அனைத்துப் பகுதிகளைப் பற்றிய கள நிலைமையை ஜெனரலால் அறியக்கூடியதாக இருந்தது.

### பல முனைகளிலும் இருந்து போராட்டம் நடத்தும் யுத்தம்

எல்.ரீ.ரீ.ஈக்கு எதிரான வடக்கு யுத்தத்தில் நான்கு முனைகளில் இருந்தும் போராட வேண்டியது அவசியம் என்று, அவர் அடையாளம் கண்ட அந்த நான்கு முனைகளும் வவுனியா, மன்னார், வெலிஓயா மற்றும் முகமாலை என்பனவாகும். அதனால் கிழக்கை திரும்ப கைப்பற்றியதை தொடர்ந்து பல முனைகளிலும் இருந்து போரைச் சமாளிப்பது கடினம் என்பதை எதிரி அறிந்து கொண்டான். “நாங்களும் நால்வர் அணிகளை வைத்து போராட ஆரம்பித்தோம், அவர்கள் காடுகளில் ஆழமாக ஊடுருவி செயற்பட பயிற்சி பெற்றவர்கள். அவர்கள் சுய நம்பிக்கையுடனும் மற்றும் சுதந்திரமாகவும் செயற்பட பயிற்றப்பட்டவர்கள். எனவே ஒரு படைப்பிரிவில் அதிக எண்ணிக்கையிலான நான்குபேர் அணிகள் இருந்தன, அது எங்களை பரந்த முனைகளில் இருந்து செயற்பட அனுமதித்தது” என்று அவர் விளக்கினார். இந்த விசேட பிரிவு தங்கள் உணவுகளை தாங்களே சமைக்கவும் மற்றும் தங்கள் முதுகுகளில் 100 இறாத்தல் வரையான பாரத்தை சுமக்கவும், காயமடைந்த சக வீரனை காவியபடியே ஏனைய பிரிவுகளுடனும் தொடர்பு கொள்ளவும் பயிற்றப்பட்டவர்கள். அவர்களுக்கு தேவையான நேரம் பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் வான்வெளி உதவி என்பனவற்றுக்கு கோரிக்கை விடவும் கூட அவர்களால் இயலும்.

சீன ஜெனரலும் மற்றும் இராணுவ மூலோபாயவியலாளருமான சண்ற்றுசுவின் ‘உனது எதிரியை அவனது பலவீனமான பகுதியில் இருந்து தாக்கு’ என்கிற பிரபலமான அறிவுரையையும் மீறி ஜெனரல் பொன்சேகா எல்.ரீ.ரீ.ஈயின் பலமான பக்கங்களில் தாக்குவதை தெரிவு செய்தார். “எதிரியின் பலமான இடத்தை நோக்கி நாங்கள் தாக்குதல் நடத்தினால், அதைக் காப்பாற்ற தங்களது சகல பலத்தையும் அங்கு அவர்கள் பயன்படுத்துவார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்போதுதான் எங்களால் உயர்ந்த பட்ச இழப்புகளை ஏற்படுத்த முடியும். 08 ஆம் பக்கம் பார்க்க...

சுழியோடி

# யாழ்ப்பாணம் தண்ணீர் பிரச்சினையை வைத்து அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகள்

கடந்த காலங்களாக யாழ் மாவட்டத்தில் பரபரப்பாக பேசப்பட்டுக்கொண்டு இருக்கும் ஒரு விடயம் தான் தண்ணீர்ப் பிரச்சினை, இதனை அரசியல் நோக்கத்திற்காக, பல்வேறுதரப்பட்ட அரசியல் கட்சிகள் தேர்தலை மையப்படுத்தி செயற்பட்டு வருகின்றமை கவலை




தரும் விடயமாக அமைகின்றது. குறிப்பாக வடமாகாண சபையினால் தண்ணீர் பிரச்சினை தொடர்பாக தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. இதற்கான தீர்வு மத்திய அரசாங்கத்தின் ஊடாகவே தீர்த்துவைக்கப்படவேண்டிய ஒரு விடயம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்கள் தெரிவித்துவரும் அதேநேரம், வட மாகாண சபையில் உள்ளவர்களில் சிலர் இப்பிரச்சினையை சீர்ப்படுத்தமுடியும் என்றும் கூறுகின்றார்கள்.

இதற்கிடையில் கட்சிகள் முந்திக்கொண்டு கருத்துக்களை முன்வைப்பதன் ஊடாக தமிழ் மக்கள் முன்னிலையில் பெரும் குழப்பநிலை காணப்படுகின்றது. இப் பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வு காணுவதைவிடுத்து, ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் அரசியல்வாதிகளுக்கும் ஒரு இடத்தை வழங்கும் நடவடிக்கையாகவே இவ் தண்ணீர்ப் பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது. மக்களின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக தண்ணீர் காணப்படுகின்றது. எனினும் இன்று யாழ்குடாவில் தண்ணீரைப்பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியிருப்பதுடன் இதற்கான தீர்வினை விரைவில் பெற்றுக்கொடுக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்.

இவ்விடயம் தொடர்பாக வடமாகாணசபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், வடமாகாண சபையினால் இத் தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமா? என அவரிடம் வினவப்பட்டபொழுது, நிச்சயமாக முடியும். அவ்வாறாயின் மக்களால் ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டது ஏன்? என கேள்வியெழுப்பப்பட்டபொழுது, அது ஒரு சில விசமிகளால் திட்டமிட்டுச் செய்யப்பட்டது என்று கூறினார். கடந்த ஞாயிற்றுக் கிழமை (12.04.2015) அன்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இரு தரப்புகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளின் மூலம் இதற்கான உரிய தீர்வுகள் எடுக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், இப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்ற பொழுதிலும் உண்மை எதுவென்று கண்டுபிடித்து அதற்கான தீர்வினை வழங்குவதற்கு முன்வராது மாறுபட்ட கருத்துக்களை கட்சியிலுள்ளவர்கள் கூறுகின்ற விடயம், மக்களுடைய அடிப்படை தேவைகளில் ஒன்றான தண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக இல்லை. மாறாக இதனை அரசியல் மயப்படுத்திக்கொண்டு செல்ல அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றார்கள்.

இதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள அரசியல் வாதிகளில் ஒரு சிலர் மேற்கொள்ளும்



பிழையினால் ஒட்டு மொத்தமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள அரசியல்வாதிகள் பாதிக்கப்படுகின்றார்கள். மத்திய அரசாங்கத்தின் கவனத்தில் கொண்டு வரப்பட்ட இப்பிரச்சினையானது, கடந்த பாராளுமன்ற அமர்வுகளில் நகர அபிவிருத்தி மற்றும் நீர்பாசன நீர்விநியோக அமைச்சர் ரவூப் ஹக்கிம் அவர்கள் தனதுரையில் இத்தண்ணீர் பிரச்சினை தொடர்பாக கருத்துக்களை முன்வைத்தார்.

இது தொடர்பாக மூன்று குழுக்களை நியமித்து அவர்கள் அதற்கான அறிக்கையை சமர்ப்பிக்கின்றபோது தீர்வுகள் எட்டப்படும் என்பதே தற்போதைய நிலையில் உள்ளது. மாகாண சபையைப் பொறுத்தவரையில் சுற்றுச்சூழல் தொடர்பாக பேசுவதற்கு அதிகாரம் இருக்கின்றது. அதற்கு மேல் அல்லது அதற்கு அப்பால் அவர்களுக்கு பேசுவதற்கு அதிகாரம் இல்லை. தற்பொழுது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பிரதேசசபையினர் தண்ணீரினை உரிய பிரதேசங்களுக்கு வழங்கிக்கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் இதற்காக அவர்களிடம் ஒரே ஒரு தண்ணீர் நிரப்பும் பவுசர் வாகனம் மாத்திரமே இருக்கின்றது.

தற்பொழுது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பிரதேசசபை தான் மக்களுக்குத் தேவையான தண்ணீரை விநியோகம் செய்துகொண்டு இருக்கின்றது. ஆனால் இதனை மத்திய அரசுதான் செய்யவேண்டும் அவ்வாறு நடைபெறவில்லை. கழிவு ஒயில் கலந்த தண்ணீரைக் குடிப்பதென்பது சாத்தியமற்ற ஒன்று. எனினும் ஒருசாரார் உலோகம் கலந்திருப்பதாகக் கூறுகின்றார்கள். எல்லோருடைய விசாரணைகளிலும் நூறு வீதம் எமக்கு சந்தேகம் இருக்கின்றது. அடிப்படையில் இலங்கை மின்சார சபையினுடைய எண்ணைக் கழிவுகள் தான் இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் ஒன்று நிலுவையிலிருக்கின்றது.

வீடு வீடாக பரிசோதனை செய்ய ஆரம்பித்து, எண்ணையானது மின்சார சபையிலிருந்து கசியப்பட்டது என்று இனங்காணப்பட்டால் ஒவ்வொரு வீட்டாருக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இதனை மூடி மறைக்கும் ஒரு செயற்பாடாகவும் ஒரு சில அரசியல் வாதிகள் செயற்படலாம். த.தே.கூட்டமைப்பு சார்பாக மத்திய அரசாங்கத்தை உடனடியாக தலையிட்டு, இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக அமைச்சர் ரவூப் ஹக்கிம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இது மக்களை எந்தளவில் திருப்திப்படுத்தும் விதமாக அமையும் என்பதைக் கூறிவிடமுடியாது.

மற்றொரு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், இப் பிரச்சினை தொடர்பாக மௌனம் சாதிப்பதே சிறந்தவழி. அரசியல் வாதிகளின் தனிப்பட்ட கருத்துக்கள் ஒவ்வொன்றும் வேறு வேறு மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு வழியமைக்கின்றது. பிரதேச சபையின் ஊடாக ஒரு சில முறுகல் நிலைகளைக் கொண்டு வருவதற்கு ஒரு சில அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றார்கள். வடமாகாணசபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இன்னமும் இதற்கான தீர்வுகள் எட்டப்படத நிலையில் இருக்கின்றன.

சுண்ணாகம் மற்றும் இரணைமடு தண்ணீர்ப் பிரச்சினையையும் ஒன்றாக முடிச்சுப்போட்டு பேசும் அரசியல்வாதிகள் இல்லாமல் இல்லை. இதற்கான தீர்வு மத்திய அரசாங்கத்தின் கையில் தான் இருக்கின்றது. வெறுமனே ஆர்ப்பாட்டங்களைச் செய்வதன் ஊடாக இதற்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை. இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதுபோனால் யாழ். மாவட்டத்தில் சுகாதாரப்பிரச்சினைகள் அதிகளவில் உருவாகக்கூடிய நிலை ஏற்படும்.

காலத்தின் தேவைக்கேற்ப செயற்பாடுகள் அமையப்பெற வேண்டுமே தவிர, ஆளுக்கொரு அரசியல் கட்சிகளை உருவாக்கி தண்ணீர்ப் பிரச்சினையை கையிலெடுத்து தமது கட்சிகளை பலப்படுத்தவும், தமது சுயவிருப்பத்துக்காக செயற்படுவதும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். தண்ணீர்ப் பிரச்சினை என்பது மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளில் பிரதானமானதொன்று. ஒருசாரார் கழிவு ஒயில் எதுவும் இல்லை என்கின்றார்கள். ஒருசாரார் ஒயில் இருக்கிறது என்கின்றார்கள். சிலர் உலோகங்களும் கலந்திருக்கிறது என்கின்றார்கள்.

மற்றுமொரு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இவ்விடயம் தொடர்பாக தெரிவிக்கையில் அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகள் அரசியலில் இலாப்ம் தேடிக்கொண்டே இருக்கின்றார்கள். இந்த தண்ணீர்ப் பிரச்சினையில் மத்திய அரசாங்கம் ஒரு தீர்வினை எடுத்து தீர்த்துவைக்குமாக இருந்தால் மக்களுடைய தேவைகளை உடனடியாக பூர்த்திசெய்வதற்கான திட்டம் வகுக்கப்படும். தண்ணீர் பிரச்சினையை வைத்து அரசியலில் குளிர் காய்வது என்பது ஏற்கப்பட முடியாததொன்று. பொதுவாக இதனை யார் அரசியல் மயப்படுத்துகின்றார்கள் என்று பார்க்கின்றபொழுது, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அனந்தி சசிதரன், புதிதாக முளைத்த கட்சிகள், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோர் இதன் பின்னணியில் மக்களைத் தூண்டிவிட்டு இருக்கின்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இவர்கள் மட்டுமல்ல இவர்களைக் கூறுகின்றவர்களும் அதே குற்றத்தைத்தான் செய்கின்றார்கள். ஆகவே தமிழ்த்தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றிற்கு மதிப்பளித்து, மக்களுக்கு தண்ணீர்ப் பிரச்சினையை காரணங்காட்டி தூண்டிவிடாது, தண்ணீர்ப் பிரச்சினைக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து அதற்கான நிரந்தரத்தீர்வுகள் எடுக்கப்படவேண்டும்.

அல்லாவிடின் அரசியல்வாதிகள் இதனை மையமாகக்கொண்டு தமது அரசியலை வளர்த்துக்கொள்வார்களே தவிர, பிரச்சினைக்குத் தீர்வுகான முடியாத சூழ்நிலை உருவாகி, மத்திய அரசாங்கம் தான் இதில் தலையிட்டு, தீர்வினை பெற்றுக்கொடுத்துவிட்டோம் என்று பறைசாற்றி, அவர்களது அரசியலை வளர்த்துக் கொள்வதற்கு வழியமைத்துக் கொடுக்கின்றோமே தவிர, வேறு ஒன்றையும் அரசியல்வாதிகளாகிய இவர்கள் செய்து கொள்ளவில்லை. ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை செய்வதற்காக வடமாகாணசபையின் முதலமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் அதனைக் குழப்பும் நோக்கில் பல கட்சிகள் செயற்பட்டு வருகின்றமை கவலைக்கிடமானது. இவற்றைக் கருத்திற்கொண்டு தண்ணீர்ப் பிரச்சினையை எவ்வாறு கையாள்வது என்றும், இதற்குள் அரசியலை உள்நுழைக்காது, அனைவரும் பொதுநோக்கோடு செயற்படுவது இப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரே ஒரு வழியென்பது குறிப்பிடத்தக்கது.

நெற்றிப்பொறியன்

# இராணுவ அட்டூழியத்தாலும், வன்முறையாலும் தமிழ் மக்களை அடிபணியச்செய்ய முடியாது – பிரபாகரன்

**கடந்தவாரத்தொடர்ச்சி...**

ஆனால் இந்திய அரசோ கலக்கம் அடைந்திருந்த நிலையில் ஐப்பசி 31, 1984இல் இந்திரா காந்தி தன் மெய்ப்பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் அரசியல் அனுபவம் குறைந்த விமான ஓட்டியான இந்திராகாந்தியின் மூத்த மகன் ராஜீவ்காந்தி இந்தியப் பிரதமராக நியமிக்கப்பட்டார். அவர் இலங்கைத் தீவின் இனப் பிரச்சினை பற்றியும், தமிழீழ விடுதலைப் போர் பற்றியும், குறிப்பாக தலைவர் பிரபாகரன் பற்றியும் மிகவும் தவறான எண்ணங்கள் கொண்டு செயற்படத் தொடங்கினார். தமிழீழ மக்களின் உயிர்வாழும் உரிமை இலங்கைத் தீவில் ஸ்ரீலங்கா அரசால் பறிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையைப் புரிய மறுத்த ராஜீவ் காந்தி பதவியேற்ற காலம் முதல் தமிழீழ விடுதலைக்கு எதிராக, ஸ்ரீலங்கா அரசுக்குச் சார்பாகச் செயற்படத் தொடங்கினார். இதில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளை வழிநடத்தி வந்த தலைவர் பிரபாகரனுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் குறிப்பாக ராஜீவ் காந்திக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது முப்பத்தொராவது வயதில் தமிழீழம், புங்குடுதீவைச் சேர்ந்த மதிவதனி என்ற பெண்ணை 1984ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

**திம்புப் பேச்சுவார்த்தை**

ராஜீவ்காந்தியின் தலைமையில் இந்திய அரசு இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையை தன் விருப்பத்திற்கு ஏற்ப கையாளத் தொடங்கி, ஈடுபட்டுவந்த தமிழீழ விடுதலைப்புலிகள் மீது அழுத்தங்களைப் போட்டு, 1985இன் ஆரம்பத்திலிருந்தே தலைவர் பிரபாகரனின் தலைமையில் கெரில்லா நடவடிக்கைகளில் 1985 ஆனி 18இல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிங்கள ஆயுதப் படைகளுக்கும் இடையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து அதே ஆண்டின் ஆடி மாத முற்பகுதியில் இந்திய அரசின் மத்தியத்துவத்தின் கீழ் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுக்கள் ஆரம்பமாயின. சகல தமிழ் குழுக்களும் கலந்து கொண்டன. தமிழர் தேசியம், தமிழர் தாயகம், தமிழர் தன்னாட்சி உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை மற்றைய தமிழ் குழுக்களும் ஏற்றுக்கொண்டன. ஆனால் இக்கோரிக்கையைச் சிங்கள அரசு நிராகரித்தது. இப்படியாகச் சிக்கலடைந்த திம்புப்பேச்சு வார்த்தைகள், போர் நிறுத்தத்தை மீறி சிங்களப்படைகள் திருகோணமலையிலும் வவுனியாவிலும் நடாத்தி முடித்த தமிழினப் படுகொலையில் 200 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து முறிவடைந்தன. இந்நேரத்தில் தமிழீழத்தில் தன் தளபதிகளுடன் தலைவர் பிரபாகரன் போர் நிறுத்தம் பேச்சுவார்த்தை பற்றிய நிலைப்பாடுகள் குறித்து கலந்துரையாடிக்கொண்டிருந்தார்.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார். இதனால் தலைவர் பிரபாகரனுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் பாரிய முரண்பாடும் இடைவெளியும் ஏற்பட்டது. ஆனால் இந்தியா பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தலைவர் பிரபாகரன் பின்வருமாறு கூறியிருக்கிறார். "எமக்கு இந்தியாவின் உதவியும் நல்லெண்ணமும் அவசியம். அதே வேளையில் இந்தியா தனது தீர்வைத் தமிழீழ மக்கள் மீது திணிப்பதை நாம் விருப்பவில்லை. தங்களது எதிர்காலத்தை தீர்மானிக்கும் முழு உரிமையும் எமது மக்களுக்கு உண்டு" என்றார். ஆனால் இந்திய அரசும், அதன் பிரதமரும் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களின் விடுதலையில் எவ்வளவு உறுதியாக இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளாமல் அப்போதைய தமிழக முதல்வருக்கு அழுத்தங்களைக் கொடுத்து, 1986ம் ஆண்டு ஐப்பசியில் தமிழக காவற்துறை மூலம் தமிழகத்தில் விடுதலைப்புலிகள் வைத்திருந்த தகவல் தொடர்புச் சாதனங்களைப் பறித்தார்கள். தலைவர் பிரபாகரனையும் மற்றைய போராளிகளையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று குற்றவாளிகளை நடத்துவது போன்று நடத்தினார்கள்.

**சாகும் வரையிலான உண்ணாவிரதம்**

இந்நிலையில் தலைவர் பிரபாகரன் என்ன செய்யப்போகிறார் என்பது ஒரு பெரும் கேள்விக்குறியாக இருந்தது. ஆயுதப்போராட்ட இயக்கத்தின் தளபதி, சிங்களப்படைகளின் சிம்ம சொப்பனமான தலைவர் பிரபாகரன், அனைவரும் எதிர்பார்த்ததற்கு மாறாக தமிழகக் காவற்துறையினர் தங்களிடம் இருந்து பறித்த தகவல் தொடர்புச் சாதனங்களைத் திரும்பித்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நீர், ஆகாரம் இன்றி சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை 1986ம் ஆண்டு கார்த்திகை 22ம் நாள் தொடங்கினார். அவரின் இந்தச் செயல் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தது. தலைவர் பிரபாகரனின் மன உறுதியைப் புரிந்துகொண்ட இந்திய அரசு கோரிக்கையை ஏற்றுத் தகவல் தொடர்பு சாதனங்களைத் திருப்பிக் கொடுத்தது. உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. இவ் உண்ணாவிரதம் குறித்து அப்போது சில பத்திரிகையாளர்கள் தலைவர் பிரபாகரனிடம் வினாத்தொடுத்தார்கள்.

பத்திரிகையாளர் :- உங்களுடைய அஹிம்சைப் போராட்டத்துக்கு வெற்றி கிடைத்திருக்கும் போது இலங்கையிலும் அஹிம்சை முறையிலே போராடலாமே, ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய அவசியம் ஏன்? என்று கேட்டார்கள். தலைவர் பிரபாகரன், உலகிலேயே தன்னுடைய சுதந்திரத்தைப் பெறுவதற்கு அஹிம்சை முறையில் போராடி வெற்றி பெற்ற நாடு இந்தியா. எனவே அஹிம்சைப் போராட்டத்தின் மகத்துவத்தைப் புரிந்திருக்கிற இந்தியாவில் எனது அஹிம்சைப் போராட்டத்திற்கு வெற்றிகிடைத்திருக்கிறது. ஆனால் மனித நேயமற்ற இனவெறிச் சிங்கள அரசிடம் அஹிம்சை முறை எடுபடாது. எனவேதான் தமிழீழத்தில் நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிறோம்" என்றார்.

**பெங்களூர் மாநாடு**

இதற்குப் பின் பெங்களூரில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள சிங்கள அரசின் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா வந்தபோது அவருடன் பேச்சுவார்த்தையில் கிழக்கு மாகாணத்தைத் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற ரீதியில் மூன்று பகுதிகளாகவும் பிரிக்கலாம் என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா சொன்னதாக தலைவர் பிரபாகரனிடம் இந்திய அரச தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தலைவர் பிரபாகரனோ "வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டாக இருப்பதனை ஒன்றாக இணைக்கவேண்டும் என்பதனை நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கும் போது, இரண்டை நாலாக கூறுபோடும் யோசனையை நாங்கள் எப்படி ஏற்கமுடியும்?" என்று கூறி நிராகரித்து விட்டார்.

அத்துடன் இந்த பெங்களூர் பேச்சுவார்த்தையில் தான், தலைவர் பிரபாகரனுக்கு முதல் அமைச்சர் பதவி தருவதாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்திய அரசுக்கூடாக தெரிவித்தார். இதற்கு தல்லவர் பிரபாகரன் "இது ஒரு மாயவலை, தமிழ் இனத்தை அழிப்பதற்கு வேறு வகையாகப் பின்னப்பட்ட சதி வலை. அதிகாரங்கள் எதுவுமற்ற, நினைத்தால் ஜனாதிபதியால் கலைக்கக் கூடிய மக்களுக்கு எந்தவித நன்மையும் செய்யமுடியாத பொம்மைப் பதவிதான் முதல் மந்திரிப் பதவி" என்று கூறி அதனைத்தூக்கி எறிந்துவிட்டார்.



**தமிழீழம் திரும்புதல்**

தமிழ் நாட்டில் இருக்கும் வரை தனக்கு மத்திய மாநில அரசுகளின் நிர்ப்பந்தம் இருந்து கொண்டேயிருக்கும். இந்திய அரசுடன் பேசவரும்போது டில்லியிலோ அல்லது சென்னையிலோ தன்னைக்கொலை செய்து தமிழீழப் போரை அழிக்க முயற்சிக்கலாம். மொத்தத்தில்தமிழ்நாட்டில்இருக்கும்வரை ஆபத்து நீடிக்கவே செய்யும். எனவே தமிழீழம் திரும்பிச் செல்வதன் மூலம் விடுதலைப்போர் மேலும் வலுவடையும் என்ற உறுதியான முடிவில் தலைவர் பிரபாகரன் 1987ம் ஆண்டு தை 3ம் நாள் தமிழீழம் திரும்பினார்.

தலைவர் பிரபாகரன் தமிழீழம் திரும்பியதனை அறிந்த ஸ்ரீலங்கா அரசும், அதன் படைகளும் கலக்கம் அடைந்த வேளையில், இந்திய அரசும் அதன் உளவுப்படையும் குழப்பம் அடைந்தன. இனி எவ்விதம் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையில் தலையிடுவது என்று குழம்பிய நிலையில் ஸ்ரீலங்காப் படைகளின் சில மூர்க்கமான இராணுவ நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக ஒத்துழைத்து அதன்மூலம் தமிழீழ மக்களுக்கு ஏற்படும் பாரிய அழிவுகளில் இருந்து அவர்களை மீட்கும் "இரட்சகர்" என்ற போர்வையில் தமிழீழத்தில் தன் இராணுவத் தலையீட்டை மேற்கொள்ளலாம் எனத்திட்டமிட்டு இந்திய அரசு செயற்பட்டது.

1987 வைகாசி 1ம் நாள் உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களுக்கு ஆற்றிய உரையில், "நாம் போராடி, இரத்தம் சிந்தி, எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். எமக்கு வேறு வழியே இல்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழிய வேண்டும் அல்லது போராடிச் சுதந்திரமாக வாழ வேண்டும். இதுதான் எமது அரசியல் தலைவிதி. இன்று இந்தத் தொழிலாளர் தினத்தில் நாம் ஒரு உறுதி செய்து கொள்வோம். அதாவது சுதந்திர தமிழீழ தனி அரசுதான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு. இறுதியான தீர்வு. இந்தத் தனி அரசை அமைக்க நாம் எமது உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம். இது எமது தொழிலாளர் தினப் பிரகடனமாக அமையட்டும்" என்றார்.

**தமிழீழத்தில் இந்தியாவின் நேரடி இராணுவத் தலையீடு**

1987ம் ஆண்டு ஆடி 24ம் நாள் இந்திய அதிகாரிகள் சிலர் தலைவர் பிரபாகரனை யாழ்ப்பாணத்தில் சந்தித்து 'இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்தி உங்களைச் சந்தித்து முக்கியமான விடயமாகப் பேசவிரும்புவதாக' கூறித் தலைவர் பிரபாகரனை டில்லிக்கு அழைத்து செல்ல முயன்றார்கள், அவசரப்படுத்தினார்கள். இந்நிலையில் தமிழீழ மக்களுக்கு தலைவர் பிரபாகரன் ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

அதில் 'இன்று தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்தை வென்று எடுக்கும் ஒரு தலைமையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றேன். நீங்கள் எனக்கு அளித்துவரும் பொறுப்புக்களை நான் நேர்மையாகவும், உண்மையாகவும், உறுதியுடனும் செய்வேன் என நம்புகின்றேன். தற்காலத்தில் காணப்படும் இடைக்கால தீர்வுகள் எமது பிரச்சினையின் தீர்வாக அமையாது. எனவே தமிழ் மக்களின் நிரந்தரமான, நிம்மதியான, சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நிரந்தர தீர்வுக்காகவே நான் பாடுபடுகின்றேன். இத்தீர்வு தமிழீழம் என்றே நான் நம்புகிறேன். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட அழைப்பின் பேரிலேயே நான் தமிழீழத்தைவிட்டு உத்தியோக பூர்வமாக இந்தியா செல்கின்றேன்' என்று கூறிவிட்டு இந்திய அரசு அனுப்பி இருந்த இராணுவ ஹெலிகொப்டரில் டில்லிக்கு புறப்பட்டார். போகும் வழியில் தமிழகத்தின் முதலமைச்சர் எம்.ஜி. ஆரை சந்தித்துப் பேசினார். அப்போதும் எதற்காக இந்த அவசர அழைப்பு என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. டில்லி சென்ற தலைவர் பிரபாகரனையும், அவரது ஆலோசகர்களையும் 'அசோகா ஹொட்டலில்' தங்க வைத்தனர்.

இந்தியாவின் ஸ்ரீலங்காவுக்கான தூதுவர் தீட்சித், இந்திய வெளிநாட்டுத்துறைச் செயலாளர் மேனன் உட்படப் பல அதிகாரிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து இந்தியாவும் ஸ்ரீலங்காவும் செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தம் பற்றி முதன்முதலாகத் தெரிவித்தார்கள். இதைக்கேட்டதும்தலைவர் பிரபாகரன் அதிர்ச்சி அடைந்தார். ஒப்பந்தத்தின் பிரதிகளை அவரிடம் கொடுத்துவிட்டு உடனே திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். இந்த ஒப்பந்தத்தினை ஏற்கமுடியாது என்று தலைவர் பிரபாகரன் மறுத்தார். தலைவர் பிரபாகரனை சம்மதிக்க வைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தலைவர் பிரபாகரன் உறுதியாக ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

இந்தியப் பிரதமர் சந்திக்க விரும்புவதாக கூறி அழைத்துச் சென்றவர்கள், பிரதமரும் தலைவர் பிரபாகரனும் சந்திக்க ஏற்பாடு செய்யவில்லை. இடையில் நான்கு நாட்கள் பறந்தோடின. தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார் என்பது திட்டவட்டமாகத் தெரிந்ததும் தமிழகத்தில் இருந்த இந்தியாவின் அடிவருடிகளான மற்றைய தமிழ் குழுக்களின் பிரதிநிதிகள் டில்லிக்கு அழைத்து வரப்பட்டனர். சொல்லி வைத்தபடியே ஒப்பந்தத்துக்குச் சம்மதம் தெரிவித்தார்கள். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அறிவித்தார். யார் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஆடி 29ம் நாள் கொழும்பு செல்லப்போவதாகவும் அறிக்கைவிட்டார். இதற்குப் பின்னர் தலைவர் பிரபாகரனை இந்தியப் பிரதமர் சந்தித்தார்.

தொடரும்...

மறவன்

கடந்தகால போராட்ட வரலாற்றை எடுத்துக்கொண்டால் விடுதலைப்புலிகளுடைய போராட்டம் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகளுடன் ஒன்றித்தே ஆரம்பமானது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழினம் பல இன்னல்களை

பதில் கிடைக்காமல் போகும். எனவே இந்நேரத்தில் சிந்தித்து செயற்படுவது அவசியமானதொன்று.

இருப்பினும் சில கட்சிகள் பலவாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை விமர்சிப்பது தமது அரசியலை வலுப்படுத்தவே. ஆனாலும்



தமர் ரணில் விக்கிரமசிங்கவின் முகவராக சம்பந்தன் செயற்படுகின்றார் என்ற கருத்தே மக்களுக்கு ஏற்படுகின்றது. பிரதமரின் நடவடிக்கை எனது சிந்தனைக்கு வலுவூட்டுகின்றது. சிறுபான்மை மக்களை அவர் புறக்கணித்து அநாதைகளாக்கிவிட்டார். உண்மையில் பகிரங்கமாக அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் சம்பந்தனையும் வளர்க்க உதவுவதால், நேரடியாகச் சிறுபான்மை மக்கள் அவமதிக்கப்படுகின்றனர். 60 ஆண்டுகளுக்குமேல் நான் அரசியலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதோடு ஒருகாலத்தில் 18 நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒருகட்சியின் தலைவராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தவன்.

நாடாளுமன்றத்தை நீடிப்பதற்காக நடத்தப்பட்ட பொதுஜன

சியம். உள்நாட்டு வெளிநாட்டு தொடர்புகளைப் பேணி வருவதன் மூலம் அந்நாட்டு வர்த்தக உறவுகளை வளர்த்துக்கொள்ள முடியுமே தவிர, எதிர்க்கட்சி அங்கத்தவரும் ஒருநாள் ஜனாதிபதியாக வருவார் என்பது நாட்டின் நடைமுறையாகும். அவ்வாறாயின் இலங்கையின் அரசியல் அமைப்பின்படி பௌத்த இனத்தினைச்சேர்ந்தவரே ஒரு ஜனாதிபதியாக வரமுடியும் என அந்த யாப்பு கூறுகின்றது.

இருக்கக்கூடிய அரசாங்கம் மூன்றில் இரு பெரும்பான்மையினைப்பெற்று, ஜனாதிபதி அதிகாரங்களையும் அந்த யாப்பினுடைய திருத்தங்களையும் மேற்கொள்ளவேண்டும். கடந்தகால அரசெல்லாம் இந்த யாப்பினைக்கொண்டே தனது அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவந்தமை குறிப்

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்கட்சி ஆசனத்தில் அமர்வது என்பது வரலாற்றுச் சாதனை. அதுவே தமிழினத்தை குழிதோண்டிப் புதைப்பதற்கு ஒப்பானது.

அனுபவித்துக்கொண்டிருக்கின்றது. ஆயுத போராட்டம் பரிணாம வளர்ச்சி பெற்று, தமிழினத்தின் விடுதலைக்காக விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு குரல் கொடுத்துவருகின்றது. இதன் காரணமாக போராட்டங்களில் எத்தனையோ இழப்புக்களை சந்திக்க நேரிட்டது. அறவழிப் போராட்டம் என்று தமிழரசுக் கட்சி ஆரம்பித்தாலும் கூட, ஒரு போராட்டத்தின் மூலமாக தமிழினத்திற்கு ஒரு விடிவு கிடைக்கும் என்ற இலக்கோடு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் போராடி வந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் ஐக்கிய நாடுகள் சபை வரை சென்றது மட்டுமல்லாது, சர்வதேசமே தமிழினத்தை உற்றுப்பார்க்கும் அளவிற்கு தமிழினம் மேலோங்கியிருக்கின்றது. இவ்வாறிருக்க, பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனம் தமிழினத்திற்கு அத்தியாவசியமான தேவையொன்றல்ல. அவ்வாறு எதிர்க்கட்சி பதவியை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளுமாகவிருந்தால் தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டம் குழி தோண்டிப் புதைக்கப்படும் ஒரு நிலைமையே தோற்றுவிக்கப்படும்.

அதுமட்டுமல்லாது தமிழ், சிங்களம் என்றபாகுபாடில்லாமல் எதிர்க்கட்சிக்கு ஆதரவினை வழங்கபலர் முன்வரலாம். இதனால் பலதரப்பட்டோர் இதில் அங்கம் வகிக்கும் நிலை ஏற்படும். இதனால் முள்ளிவாய்க்கால் படுகொலை அல்லது அதற்கு முன்னர் இடம்பெற்ற இனப்படுகொலைகள் பற்றிய விடயங்கள் அனைத்தும் மூடிமறைக்கப்பட்ட நிலையில், எதிர்க்கட்சியை வழி நடத்திச் செல்லக் கூடிய சூழ்நிலை உருவாகும். தனியே தமிழ்மக்களின் பிரச்சினைகளைமட்டும் கவனம் செலுத்த முடியாமல் போகும். ஆகவே முஸ்லீம், பேகர், சிங்களம் என எல்லோருடைய பிரச்சினைகளுக்கும் இடங்கொடுக்கவேண்டிய நிலை தோன்றும். இதன் காரணமாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பதவியினை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வகிக்குமாயின் அது ஒரு வரலாற்று சாதனையாக இருக்குமே தவிர, தமிழ் மக்களுடைய போராட்ட விழுமியங்களை பாதுகாத்துக் கொள்ளக்கூடிய அல்லது அவர்களின் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அற்றுப்போகின்ற நிலைதோன்றும். ஒட்டுமொத்தத்தில் தமிழினம் இதுவரை காலமும் போராடிய போராட்டத்திற்கு

எதிர்க்கட்சியாக ஆசனத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அமர்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் அவர், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித்தலைவர்பதவியைகோருவதற்கு தார்மீக உரிமையோ சட்டரீதியான உரிமையோ அற்றவர்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:- வழமைகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றை நாம் இன்றைய சூழ்நிலையில் கணக்கில் கொள்ளமுடியாது. ஒரு குறிப்பிட்ட இனமோ, குழுவோ எடுத்த முயற்சி என்றில்லாமல் நாட்டுமக்கள் அனைவரும் இணைந்து ஏற்படுத்திய இரத்தம் சிந்தாத அமைதியாக ஏற்படுத்தப்பட்ட புரட்சியே இன்றைய நிலைமைக்குக் காரணம். அதற்கு அரசியல் கட்சிகள் கூட உரிமை கோரமுடியாது.

தமிழ் மக்கள் தம் வழிநடத்தலுக்குஒத்துச்செயற்பட்டனர் என்று நாடாளுமன்றத்தில் சம்பந்தனும், ஊடகங்கள் மூலமாக மாவை சேனாதிராஜாவும் நன்றி கூறுவது வேடிக்கையாக உள்ளது. ஆனால் இவர்கள் மக்களுக்கு அறிவுறுத்தல் விடுவதற்கு முன்பே தபால் மூலம் 500,000க்கு மேற்பட்ட மக்கள் வாக்களித்துவிட்டார்கள். பொது வேட்பாளரின் பெயர் தெரியப்படுத்தப்படுவதற்கு முன்பே நாடுமுழுவதும் மக்கள் அத்தகைய வேட்பாளருக்கு வாக்களிக்க தீர்மானித்துவிட்டார்கள். வேட்பாளர்களின் பெயர் வெளியாகியவுடனேயே தமிழர் விடுதலைக் கூட்டணி தனது ஆதரவை பொது வேட்பாளருக்குத் தெரியப்படுத்தி ஊடகங்கள் மூலமாக அறிக்கை வெளியிட்டது. எனது அபிப்பிராயத்தின்படி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்வை மக்களிடமே விட்டிருக்கவேண்டும்.

அவ்வாறு செய்திருந்தால் இன்னும் கூடுதலான வாக்குகளை பொதுவேட்பாளர் பெற்றிருக்கமுடியும். எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பற்றி கூறுவதற்குமுன்பு தேசிய நிறைவேற்றுக் குழுவில் சம்பந்தனை நியமித்தது புத்திசாலித்தனமற்ற செயல் என்பதைச் சுட்டிக் காட்டவிரும்புகின்றேன். ஏனெனில் அச்சபை மந்திரி சபையிலும் பார்க்க அதிகாரம் கூடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறானால் சரியோ பிழையோ பிர

வாக்கெடுப்பை எதிர்த்து ஜனநாயகத்தைக் காப்பதற்காகப் பதவிகளைத் துறந்த ஒரேயொரு கட்சியாகவும் எனது கட்சி இருக்கிறது. இத்தகைய பெறுமதி மிக்க கட்சியை ஜனநாயகத்திற்கு விரோதமாக செயற்பட்ட ஓர் அமைப்பைக் கொண்டு முற்றுமுழுதாக அழிக்கமுயற்சித்த கட்சிதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. பிரதமர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டபோது தமிழர் விடுதலைக்கூட்டணியின்தலைவராகியநான் அங்கிருந்தபோதும் பிரதமர் என்னைக் கண்டுகொள்ளவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சிறுபான்மைக் கட்சிகளை ஒழித்துக் கட்டுவதிலேயே குறியாகவுள்ளார். சகல கட்சிகளும் ஆதரவுவழங்கியும் அக்கட்சிகளை ஒன்றிணைத்து செயற்படத் தவறிவிட்டார்.

சிறுபான்மைக் கட்சிகளான தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளை தானே தீர்த்துவைக்காமல் ஜனாதிபதி உதவியை நாடி தோல்விகண்டவர். 2004ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் 95 வீதம் வாக்குகளைப் பெற்று 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்தது உலகில் எந்தநாட்டிலும் நடக்காத பெரும் மோசடியாகும். இதே த.தே.கூ 2010ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பத்து வீதமானவாக்குகளைக்கூட பெறமுடியவில்லை. உதாரணமாக ஏழரை லட்சம் வாக்காளர்களைக் கொண்ட யாழ். தேர்தல் மாவட்டத்தில் 63,000 வாக்குகளையே பெற்றது. 25 ஆண்டுகளுக்கு முன்பு இடம் பெயர்ந்த ஒரு முஸ்லிம் குடும்பத்தைக் கூட யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்த்த எதுவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. இத்தகைய அமைப்பின் தலைவர் ஒருபொறுப்புள்ள பதவியை அடைய வேண்டுமானால் மேலே கூறப்பட்டுள்ள விடயங்களுக்கு உடன் பரிகாரம் தேடவேண்டும் என்று குறிப்பிடும் அவர், கட்சியில் ஏற்பட்ட பிளவுகளின் காரணமாக தான் அந்த எதிர்க்கட்சிப் பதவியினை தக்கவைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக இவ்வாறு ஆனந்தசங்கரி கூறுவதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் தெரிவித்திருக்கும் அதேநேரம், பொதுவான கருத்துக்களின்படி எதிர்க்கட்சிப் பதவி என்பது சாதாரணமானதொரு விடயம் என்று கூறிவிட முடியாது.

அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமையவேண்டும். அதற்கான வேலைத்திட்டங்கள் மிகத்தீவிரமாக முன்னெடுக்கப்படவேண்டியது அவ

பிடத்தக்கது. பல்வேறு காரணங்களுக்காக, நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியில் நிறைவடையும் வகையிலேயே அரசின் செயற்பாடுகள் அனைத்தும் அமையப்பெற்றது.

குறிப்பிட்ட காலவரையறைக்குள் தமிழ் மக்களுடைய பிரச்சினையில் தீர்வினைக்காணவேண்டும் என்பதற்காக விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்திப்போராடினர். எதிர்க்கட்சி அல்லது முதலமைச்சர் பதவிகளுக்கு பிரபாகரன் அன்று ஆசைகொண்டிருந்தால் தமிழ் மக்களின் விடிவுக்காக இத்தனை உயிரிழப்புக்களை சந்தித்திருக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றிற்காக இந்நாட்டில் உயிர்த்தியாகம் செய்த தமிழ்மக்கள் எத்தனையாயிரம் பேர்? இன்று ஐ.நா சபையிலும், மனித உரிமை ஆணைக்குழுக்களிலும் ஒரு இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டது என பல்வேறான ஆவணங்கள் தயார்படுத்தப்பட்ட நிலையிலும் அனைத்தும் பயனற்றதாகவே காணப்படுகின்றது.

சர்வதேசரீதியில்விடுதலைப்புலிகளின் போராட்டம் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டபோதிலும் அதன்பின்னர் எந்தவித கேள்விகளும் இன்றி அனைத்து விடயங்களும் மூடிமறைக்கப்பட்டன. இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சிப்பதவியினை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பெற்றுக் கொள்வதன் ஊடாக தமிழ்மக்களுக்கான தீர்வுகள் கிடைக்கப்பெறும் என்று கூறிவிட முடியாது. போராட்டத்தின் தன்மையே மாற்றம் பெறும் அளவிற்கு தமிழ்ச் சமுதாயம் சிங்களமயமாக்கப்படும். இருக்கின்ற பௌத்த விகாரைகளை விட பன்மடங்கு விகாரைகள் வடகிழக்கில் உருவாக்கம் பெறும். சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றோருக்குப்பின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை திடமாக நின்று வழிநடாத்திச் செல்வதற்கான வாய்ப்புக்கள் அற்றுப்போகும். இவர்களுக்குப்பின் யாரை கட்சியில் பலமாக நிறுத்தவேண்டும் என்பதை நோக்காகக்கொண்டு, எதிர்க்கட்சிப்பதவிக்கு ஆசைப்படாது தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றில் உறுதியாக நின்று, தொடர்ந்தும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு செயற்படுமாகவிருந்தால் தமிழினத்தின் அழிவு பாதுகாக்கப்படும். இல்லையேல் தமிழினம் குழிதோண்டிப்புதைக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

மறவன்

# பிராந்தியச் செய்திகள்



## இரண்டு வயதுக் குழந்தை கிணற்றில் வீழ்ந்து பரிதாப மரணம்



இரண்டுவயதுப்பெண் குழந்தையொன்று கிணற்றில் வீழ்ந்து பரிதாபகரமான் முறையில் உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஓட்டமாவடி-ஹூதா பள்ளிவாயல் வீதியில் அமைந்துள்ள வீட்டுக் கிணறொன்றில் மாலை 4.00 மணியளவில் வீழ்ந்த குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, புணானை, ரிதிதென்ன பாடசாலை வீதியைச் சேர்ந்த முகம்மது ஹக்கிம் என்பவர் தனது குடும்பத்துடன் ஓட்டமாவடியிலுள்ள தனது உறவினர்களின் வீட்டில் மாலை நடைபெற்ற திருமண வைபவத்திற்கு வந்த சமயமே இச்சோகச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

திருமண வீட்டில் பிள்ளைகளுடன் தனது பிள்ளையும் விளையாடிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு பெற்றோர் இருந்துள்ளனர். இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக பிள்ளையைக் காணாததால் வீட்டுச் சூழலில் தேடிப்பார்த்து விட்டு, வீட்டுக் கிணற்றில் பார்த்த போது, பிள்ளை வீழ்ந்து கிடப்பது தெரிய வரவும், பிள்ளையை உடன் மீட்டு, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது, பிள்ளை ஏற்கனவே மரணமடைந்துள்ளதை வைத்தியசாலை வைத்தியர்கள் உறுதி செய்துள்ளனர்.

அப்ரிதா (வயது-02) என்ற பெண் குழந்தையே மரணமடைந்ததாக பிள்ளையின் தந்தை ஹக்கீம் தெரிவித்தார். குழந்தையின் சடலம் தற்போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இதுதொடர்பாக வாழைச்சேனைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்ச்சையில் சிக்கிய காத்தான்குடி இஸ்லாமிய அருங்காட்சியகம்

மட்டக்களப்பு காத்தான்குடியில் அண்மையில் அமைக்கப்பட்டுள்ள முதலாவது முஸ்லிம்கள் அருங்காட்சியகம் சர்ச்சையில் சிக்கியுள்ளது. குறித்த அருங்காட்சியகத்தில் இஸ்லாம் மார்க்கத்திற்கு மாறான விதத்தில் உருவச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து இவ்விவகாரம் சர்ச்சையை கிழப்பியுள்ளது. இலங்கை முஸ்லிம்களின் கலாசார மரபு, வழிபாடு, வர்த்தகம், உணவுப் பழக்கவழக்கங்கள் என வரலாற்று சான்றுகளையும் கலாசார அடையாளங்களையும் பிரதிபலிக்கும் அம்சங்களைக் கொண்டதாக தேசிய மரபுரிமை அமைச்சின் உதவியுடன் இவ் அருங்காட்சியகம் காத்தான்குடி நகர சபையினால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்திலேயே உருவச்சிலைகள் காணப்படுவதாக பிரதேச உலமா சபையினால் அகில இலங்கை உலமா சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு, இது தொடர்பாக மார்க்கதீர்ப்பு வழங்குமாறு கோரிக்கையும் முன் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அகில இலங்கை உலமா சபையின் பத்வா குழுவினால் காத்தான்குடி நகரசபை தலைவருக்கு அவசர கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் உருவச்சிலைகளை வணங்கவோ அவற்றை கண்ணியப்படுத்தவோ அல்லது ஞாபக சின்னங்களாக வைத்திருக்கவோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்று அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அருங்காட்சியகத்தை அவசரமாக திறக்க வேண்டியிருப்பதால் அதனை பார்வையிட்டு இஸ்லாமிய சட்ட அடிப்படையில் இது தொடர்பான ஆலோசனைகளை வழங்குமாறு நகர சபையினால் அகில இலங்கை உலமா சபையிடம் ஏற்கனவே வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும் இதற்கான நடவடிக்கைகள் இதுவரைக்கும் முன்வைக்கப்படவில்லை. இது தமது இஸ்லாம் மார்க்கத்திற்கு முரணாக அமைந்துள்ளதாகவும் உலமா சபை மேலும் தெரிவித்துள்ளனர்.

## நாடுகடத்தப்பட்ட நிலையில் இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

துருக்கி ஊடாக இத்தாலிக்கு செல்ல முற்பட்ட வேளையில் அங்கிருந்து நாடுகடத்தப்பட்ட நிலையில் அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தமிழ் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். போலி ஆவணங்களை சமர்ப்பித்த குற்றச்சாட்டில் இவரை கைது செய்ததாக கட்டுநாயக்க விமான நிலைய புலனாய்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தை சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே இவ்வாறு விமான நிலைய புலனாய்வு துறையினரால் கைது செய்யப்பட்டார்.

இவர் இந்நாட்டில் இருக்கின்ற இலங்கை பிரஜை ஒருவருக்கு மூன்று இலட்சம் ரூபாவை கொடுத்து இத்தாலிக்கு செல்வதற்கான போலியான ஆவணங்களை தயாரித்து கொண்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் இதுவரை 15 இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் விமான நிலையத்தில் வைத்து புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## லக்சபான ஆற்றிலிருந்து யுவதியின் சடலம் மீட்பு



மஸ்கெலியா, கெனியன் நீர்த்தேக்கத்திற்கு அருகில் லக்சபான ஆற்றிலிருந்து யுவதியின் சடலமொன்று வெள்ளிக்கிழமை காலை பொது மக்களால் மீட்கப்பட்டதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர். பழனிசாமி சரோஜினி எனும் 18 வயதுடைய யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த யுவதி, தனது தாயுடன் 15ம் திகதி சண்டையிட்டு வீட்டை விட்டு வெளியே வந்துள்ளதாகவும் மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பொலிஸார் தேடுதல் மேற்கொண்டிருந்த வேளையிலேயே இவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி சட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புத்தளம் வாகன விபத்தில் 24 பேர் காயம்



புத்தளம் கல்பிட்டியில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் 24 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கல்பிட்டி - பலாவி பிரதான வீதியில், கல்பிட்டியில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற பஸ் ஒன்றும் கல்பிட்டியில் இருந்து அனுராதபுரம் நோக்கி சென்ற பஸ் ஒன்றும் மோதியதனாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் காயமடைந்த 24 பேரும் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் இருவரின் நிலை கவலைக்கிடமான நிலையில் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இரு பஸ்ஸினதும் சாரதிகள் கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில் இனந்தெரியாத நபர்களினால் இருவர் மீது தாக்குதல்



வவுனியா தூசைப்பிள்ளையார் குளம் என்னும் இடத்தில் வசிக்கும் S.ஜெகதீஸ்ரன் என்பவரின் வீட்டிற்குள் 31.03.2015 அன்று இரவு நேரத்தில் நுழைந்த இனந்தெரியாத நபர்களால் ஜெகதீஸ்வரனும், அவரது நண்பரும் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவரது வீட்டினையும், உடமைகளையும் மேலும் அவர்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் எரியூட்டி தப்பிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக அவசர பொலிஸ் பிரிவிற்கு கிடைத்த முறைப்பாட்டினை தொடர்ந்து, சம்பவ இத்திற்கு விரைந்த பொலிஸார் இரத்த வெள்ளத்தில் கிடந்த அவரது நண்பரையும், ஜெகதீஸ்வரனையும் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர். இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**படங்களும் தகவலும் :- இ.தர்சன்**

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதனால்தான் வவுனியாவின் மேற்குப் புறத்தை ஒரு யுத்த முனையாகத் தெரிவு செய்தேன்" என அவர் சொன்னார்.

அடுத்ததாக இராணுவம் மன்னாரிலிருந்து தாக்கத் தொடங்கியது, அங்கு எல்.ரீ.ரீ.ஈ பரந்த அளவிலான நெல் வயல்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இந்த இடத்தை கைப்பற்றுவது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் கருதினார், ஏனெனில் நெல் வயல்கள் இல்லாமற் போனால் எல்.ரீ.ரீ.ஈ மக்களின் நம்பிக்கையை இழந்துவிடும். "கிட்டத்தட்ட ஒரு வருடமாக நாங்கள் பாரிய யுத்தத்தினை நடத்தி வந்தோம், ஆனால் ஒரு அங்குலம் கூட முன்னேறவில்லை. நாங்கள் அவர்களுக்கு பாரியளவு இழப்புகளை ஏற்படுத்தி வந்தோம். கட்டளை தளபதி இந்த வழியில் போராடுவதன் மதிப்பு பற்றி ஒருபோதும் அறிந்திருக்கவில்லை".

கிழக்கில் முழுதாக வெற்றி பெறுவதற்கு முன்பு கூட ஜெனரல் பொன்சேகா வடக்கில் ஒரு மேலதிக படைப்பிரிவை இயக்கினார். கிழக்கில் வெற்றி கிடைத்த உடனடியாகவே வடக்கிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் கிழக்குக்கு நகர்ந்து வீழ்ந்து கொண்டிருக்கும் தங்கள் எண்ணிக்கை உயர்த்துவதை தடுக்வேண்டியதை உறுதியாக்கும் பொருட்டு வடக்கிலுள்ள இராணுவ படைகளை பலப்படுத்துவது மிகவும் முக்கியம் என, அவர் உணர்ந்தார். இவ்வாறு இருக்கின்ற காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை மேடைக்கு அழைப்பதன் ஊடாகவே அவர்களை பலவீனம் அடையச் செய்யமுடியும்என்பதை அமெரிக்கா அரசு அமைத்துக் கொண்டது. அதற்காக UNP அரசாங்கத்தின் உடைய தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் அணுகுமுறைகளை ஏற்படுத்தி விடுதலைப்புலிகளை பல துண்டுகளாக உடைத்தது. அதன் பிறகு கருணா-பிரபா பிளவு ஏற்பட்டது.

ஆனால் தற்பொழுது அரசியல் ரீதியான காய் நகர்த்தல்களை தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியாக நகர்த்தி வருகின்றனர். சர்வதேச ரீதியாக காய் நகர்த்தல்களில் ஈடுபட்டு வருவதனால் மீண்டும் விடுதலைப்புலிகள் வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதனை தடுத்து நிறுத்தும் நோக்கில் தற்போதைய அரசாங்கமும் ஈடுபட்டு வருகின்றது. மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளை முற்றாக அழித்துவிட்டோம் என கூறிக்கொள்ளும் இலங்கை அரசு மீண்டும் அவர்களுடைய எழுச்சி உருவாகிவிடும் என்பதில் இன்னமும் பயந்துகொண்டே செயற்படுகின்றது. சர்வதேச நாடுகளுக்கு பிரபாகரனுடைய தலைமை தேவையற்றதொன்றாகவே காணப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையை அகற்றுமாறும் சர்வதேசம் கேட்டுக்கொண்டது ஆனால் பிரபாகரன் அதனை மறுத்துவிட்டார். கரும்புலிகளே எமது உயிராயுதம் எனக் குறிப்பிட்ட பிரபாகரன் விடுதலைப்புலிகளின் 28 கட்டமைப்புக்களில் இருந்து கரும்புலிக் கட்டமைப்பை நீக்குவதற்கு அவர் மறுத்துவிட்டார். இதன் காரண மாக தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் பாரிய பின்னடைவைக் கண்டது. தற்பொழுது மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாகுவதையே மக்கள் விரும்புகின்றனர். UNP அரசாங்கமும் விரும்புகின்றது. சர்வதேசரீதியாக உற்று நோக்கும் பொழுது எந்தவொரு நாடும் தமக்கென ஒரு தீவிர வாத அமைப்பையோ அல்லது பாதாள உலகக் குழுவினையோ வைத்திருப்பது வழமை. அதிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் சற்று வித்தியாசமானவர்கள். தமிழ் மக்களுக்காகவே போராடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் 18.04.2015 அன்று பிற்பகல் 2.00மணியளவில் சமய சமூக கலை கலாசார ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்திஜீவிகளுக்கும், வர்த்தகர்களுக்குமான சாமஸ்ரீ தேசிய விருது வழங்கும் விழா ஒன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் கௌரவ ரிசாட் பதியுதீன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மற்றும் சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதியமைச்சர் அல்ஹாஜ் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, கௌரவ ஏ.எல்.அஹமட் (முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி) என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

**தகவல் :- இ.தர்சன்**




## விஜய்யை புகழ்ந்து தள்ளிய துல்கர்



இளைய தளபதி விஜய்க்கு தமிழகம் மட்டுமின்றி கேரளாவிலும் அதிக ரசிகர்கள் இருப்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் தமிழ் சினிமாவில் மலையாள வரவான துல்கர் நடிப்பில் வெளிவந்திருக்கும் படம் தான் ஓ காதல் கண்மணி. இப்படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட துல்கரிடம் இளைய தளபதி விஜய்யை பற்றி கேட்டுள்ளனர்.

அதற்கு அவர் 'விஜய் போல் யாராலும் நடனம் ஆட முடியாது, அவருடைய நடனத்திற்கு நான் மிகப்பெரிய ரசிகன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## நடிகை சுகன்யாவுக்கு ரூ.10 லட்சம் கிடைக்குமா?



பிரபல வார இதழ் சார்பில், மறைந்த சந்தனக் கடத்தல் வீரப்பனிடம் பேட்டி எடுக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல், அந்தப் பேட்டி வீடியோவாகவும் பதிவும் செய்யப்பட்டது. பின்னர் அந்த வீடியோ கடந்த 1996ம் ஏப்ரல் 7ம் திகதி வெளியாகி இருந்தது. அதில் நடிகை சுகன்யாவின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலும், அவதூறு பரப்பும் வகையிலும் கருத்துகள் இடம் பெற்றிருந்ததாகவும் எனவே, அந்தப் பேட்டியை வெளியிட்ட அந்த வார இதழ், பிரபல தொலைக்காட்சி, கருத்து தெரிவித்த வீரப்பன் ஆகியோருக்கு எதிராகவும் நடிகை சுகன்யா சென்னை 15-ஆவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

18 ஆண்டுகளுக்குபிறகு விசாரணைக்கு வந்த அந்த வழக்கில் சுகன்யாவுக்கு சாதகமாக தீர்ப்பு வந்துள்ளது. வழக்கு விசாரணைக்கு பிறகு நீதிபதி பிறப்பித்த உத்தரவில், வீரப்பன் இறந்து விட்டதால் வீரப்பனையும், நக்கீரனையும் இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்வதாகவும், நடிகை சுகன்யாவுக்கு அந்த பிரபல தொலைக்காட்சி நஷ்ட ஈடாக ரூ.10 லட்சத்து 500 வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

## ஜோதிகா படத்திற்கு நோ கட்



ஜோதிகா 8 வருடங்கள் கழித்து சினிமாவுக்கு ரீ என்ட்ரி கொடுத்திருக்கும் படம் 36 வயதினிலே. இப்படத்தின் படப்பிடிப்பு வேலைகள் முடிவடைந்து சமீபத்தில் ஓடியோ வெளியீட்டு விழாவும் நடந்தது. 2டி என்டர்டெயின்மென்ட் படம் மூலம் சூர்யா இப்படத்தை தயாரிக்க, ரோஜன் ஆன்ட்ருவ்ஸ் படத்தை இயக்கியுள்ளார்.

இறுதி கட்ட பணியில் இருக்கும் இப்படம் சமீபத்தில் தணிக்கை குழுவினருக்கு காண்பிக்கப்பட்டது. படத்தை பார்த்த தணிக்கை குழுவினர் படத்திற்கு ஒரு கட் கூட கொடுக்காமல் படத்திற்குயு சான்றிதழ்கொடுத்துள்ளனர். எனவே இப்படம் வருகிற மே 15ம் திகதி வெளியாக இருக்கிறது.

## புலி படக்குழுவினரின் அதிரடி கண்டிஷன்



இளைய தளபதி விஜய் நடிப்பில் புலி படம் வேகமாக வளர்ந்து வருகிறது. இப்படம் கண்டிப்பாக ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் திரைக்கு வரும் என கூறப்படுகிறது. இந்நிலையில் இப்படத்தில் விஜய் இரண்டு விதமான கெட்டப்பில் நடிக்கிறார் என்பது அனைவரும் அறிந்ததே. இதில் ஒன்று குள்ள மனிதராக நடிப்பதாக முன்பே கூறப்பட்டது.

தற்போது அதற்கான ஷூட்டிங் தான் நடந்து வருவதாகவும், படப்பிடிப்பில் விஜய்யின் கெட்டப்பை யாரும் வெளிவிடக்கூடாது என்பதற்காக மொபைல் போன்கள் பயன்படுத்த கூடாது என்று கடும் கண்டிஷன் போட்டுள்ளார்களாம்.

## உத்தம வில்லன் ரிலிஸில் சாதனை



தமிழ் சினிமா ரசிகர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்ப்பார்த்து கொண்டிருக்கும் படம் உத்தம வில்லன். இப்படம் மே 1ம் திகதி திரைக்கு வருவதாக உள்ளது. இப்படம் சென்னையில் மட்டும் சுமார் 60 திரையரங்குகளில் வெளிவரவுள்ளதாம்.

மேலும் தமிழகத்தில் 400 திரையரங்குகள் என, உலகம் முழுவதும் 1500 திரையரங்குகளில் வெளிவரவுள்ளது. சமீபத்தில் வெளிவந்த படங்களில் அதிக திரையரங்குகளில் ரிலிஸாகும் படம் உத்தம் வில்லன் தானாம்.

## பின் வாங்கிய சூர்யா?



நடிகர் சூர்யா தற்போது நடிப்பு, தயாரிப்பு என பிஸியாக இருந்து வருகிறார். இவர் நடிப்பில் விரைவில் வெளிவரவிருக்கும் படம் மாஸ். இப்படம் முதலில் மே 1ம் திகதி வருவதாக இருந்தது, பின் அன்றைய தி-கதியில் உத்தம வில்லன், பொறம்போக்கு, வை ராஜா வை படங்கள் வருவதால் அதற்கு அடுத்த வாரம் மாஸ் வருவதாக இருந்தது. ஆனால், தற்போது மீண்டும் ஒரு வாரம் தள்ளிப்போக மே 9ம் திகதி தான் படம் வரும் என அதிகாரப்பூர்வ அறிவிப்பு வந்துள்ளது.


## நயன்தாரா, ஸ்ருதியை பின்னுக்கு தள்ளிய எமி ஜாக்சன்



சமீபத்தில் விரும்பத்தக்க நடிகர் என்று ஒரு கருத்துக்கணிப்பை பிரபல இணைய தளம் ஒன்று நடத்தியது. இதில் அஜித் முதல் இடத்தில் இருக்கிறார் என்று அறிவித்தனர். இந்நிலையில் அடுத்ததாக விரும்பத்தக்க நடிகை என்ற பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் முன்னணி நடிகைகளான நயன்தாரா, சமந்தா, ஸ்ருதிஹாசன் என அனைவரையும் பின்னுக்கு தள்ளி எமிஜாக்சன் முதலிடம் பிடித்தார்.

இவரின் நடிப்பில் வெளியான ஐ படம் கல-வையான விமர்சனங்களை சந்தித்தாலும், விக்ரமைப் போலவே இவரது நடிப்பும், கவர்ச்சியும் அனை வரையும் கவர்ந்தது. இந்த பட்டியலில் ஸ்ருதிஹாசன் 2வது இடத்தையும் சமந்தா 3வது இடத்தையும் தமன்னா 4வது இடத்தையும் பிடித்தனர். நயன்தாரா 7வது இடத்திலும், ஹன்சிகா 10வது இடத்திலும், த்ரிஷா 11வது இடத்திலும் உள்ளனர்.

## ரஜினி வெளியிட்ட புதிய பாடல்



இன்றைய கால பல இளைஞர்களின் கனவாய் இருப்பது குறும்படம் இயக்குவதும், பாடல் படைப்பதும் தான். ஆனால் நாம் அன்றாடம் கலைஞர்களின் புதுபுதுப் படைப்புகளை பாராட்டிக் கொண்டு தான் வருகிறோம். அந்த வகையில் இளம் கலைஞன் அராபாத் இயக்கத்தில் பென் ஹூமன் அவர்கள் பாடல் பாடி, நடித்திருக்கும் உனக்கும் தெரியும் எனக்கும் தெரியும் என்ற பாடல் வெளியாகியுள்ளது. சத்தியரூபன் சிவலிங்கம் இசையமைத்துள்ள இப்பாடலுக்கு கோபுஜி வரிகளை எழுத, ராப் போஷன்களை பென் அவர்கள் எழுதியுள்ளார்.

பாடல் பார்க்க, கேட்க புதிதாக இருக்கிறது, அதாவது இன்றைய கால கலைஞர்களை மிகவும் கவரும் வகையில் பாடல் அமைந்துள்ளது. வீடியோ வடிவமைத்த விதம் சூப்பர், பாடலில் இடம் பெற்ற நடனம் அமர்க்களம். ஒளிப்பதிவு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் சினிமாபாடல்களுக்குஒப்பாக இருக்கிறது. பாடலின் ப்ளஸ்ஸாக நடனம் இருக்கிறது, பாடல் இசை, சூப்பர், மெலோடியாகவும் இருக்கிறது. அதேசமயம் துள்ளலாகவும் இருக்கிறது. மொத்தத்தில் பாடல் வாவ் என்று சொல்ல வைக்கிறது, பாடல் முழுவதும் சூப்பர், பாடல் குழுவினர் ஒவ்வொருக்கும் வாழ்த்துக்கள். இவர்கள் இதுபோல் நிறைய படைப்புகளை படைத்து வாழ்க்கையில் வெற்றி பெற வாழ்த்துவோம்.

## நயன்தாரா வேண்டவே வேண்டாம் – ஆர்யா



ராஜேஷ் இயக்கத்தில் ஆர்யா, நயன்தாரா நடித்த பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தை நாம் மறக்கவே மாட்டோம். இந்த படத்தின் இரண்டாம் பாகத்தில் கூட இதே கூட்டணி இணைய இருப்பதாக செய்திகள் வெளிவந்தது. ஆனால் நயன்தாரா இப்படத்தில் ஆர்யா என்றால் என்னால் நடிக்கவே முடியாது என்று கூறி படத்தில் இருந்து விலகியிருந்தார்.

ஆர்யா தற்போது ஏ.எல்.விஜய் இயக்கும் புதிய படத்தில் கமிட்டாகி இருக்கிறார். இப்படத்தில் நயன்தாராவை நாயகியாக நடிக்க வைக்க விரும்பினாராம் விஜய். ஆர்யாவும் வேறு யாரை வேணும் என்றாலும் கதாநாயகியாக நடிக்க வைங்க, ஆனால் நயன்தாரா மட்டும் வேணாம் என்று கூறியுள்ளாராம்.

## கலெக்டர் அலுவலகம் முன்பு வடிவேலு போராட்டம்



தெனாலிராமன் படத்திற்கு பிறகு வைகை புயல் வடிவேலு நடித்துவரும் படம் எலி. யுவராஜ் தயாளன் இயக்கி வரும் இப்படத்தில் வடிவேலு இரண்டு வேடங்களில் நடித்து வருகிறார். ஒரு வேடத்தில் திருடனாக நடிக்கிறார். சமீபத்தில் இப்படத்துக்கான படப்பிடிப்பு கலெக்டர் அலுவலகத்துக்கு முன்பு நடந்துள்ளது.

அதாவது இரவு நேரத்தில் விமானங்கள் பெரும் சத்தத்துடன் செல்வதால் அங்கு சுற்றி இருக்கும் மக்களால் இரவில் சரியாக தூங்க முடியவில்லை. இப்படி மக்கள் தூங்காமல் இருப்பதால் வடிவேலுவால் திருட்டு தொழில் சரியாக செய்ய முடியாத நிலை ஏற்படுமாம். அதனால் வேலை இல்லாமல் ஊர் சுற்றிக்கொண்டு திரியும் ஒரு கூட்டத்தை பிரியாணி வாங்கித் தருவதாக சொல்லி கலெக்டர் அலுவலகம் எதிரே பட்டினிப் போராட்டம் நடத்துவாராம் வடிவேலு.

## அடுத்த கட்டத்திற்கு நகர்ந்த சிவகார்த்திகேயன்




சிவகார்த்திகேயன் ஜெட் வேகத்தில் தற்போது வளர்ந்து வருகிறார். காக்கிசட்டை வெற்றியை தொடர்ந்து தற்போது ரஜினிமுருகன் படம் இவரது நடிப்பில் வெளிவரவிருக்கின்றது. இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது. திருப்பதி பிரதர்ஸ் தயாரிக்கும் இப்படம் மே மாதம் திரைக்கு வரவுள்ளதாக கூறப்படுகிறது. தற்போது தன் அடுத்தப்பட வேலைகளில் பிஸியாக உள்ளாராம் சிவகார்த்திகேயன்.

**எத்தனை தோல்வி வந்து கீழே விழுந்தாலும், பீனிக்ஸ் பறவை போல் மீண்டு எழுந்து வானத்தை நோக்கி பறந்து கொண்டிருக்கும் சீயான் விக்ரம் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்**



# கவிதைப் பூங்கா



## மிதிக்கப்படுகின்றது

இங்கே
மதிக்கப்படாமல்
மிதிக்கப்படுகிறது
மனிதம்!

பள்ளி
மாணவரின் குடிதண்ணீரில்
எப்படி வந்தது
விஷம்!

மீண்டும்
புரட்டப்பட்டது
அவளுடைய புதை
குழி!
அந்த மாணவியின் மரணத்துக்கு
யார் தான் காரணம்!

இன்று
நடந்துகொண்டிருப்பது
வீண் மரணங்கள்
மட்டும் அல்ல
திட்டமிட்டு
நடத்தப்படுகின்ற
மரணங்களும்
தான்!

மாணவ
பிஞ்சுகளை வளரவிடாமல்
தறித்து
வீசினால்
நாட்டின்
எதிர்காலம் என்பது
சோலை அல்ல பாலை
வனம்!

எங்கள்
தமிழ் அமைப்புக்களே!
அரசியல் மட்டும்
பேசினால்
போதுமா!

இறங்கி
வாருங்கள்
எங்கள் மாணவர்களை
காக்க!

உயிரோவியன்

## வேர்கள்

உறவுகளை அறிமுகப்படுத்தி,
உயிரை உணரவைத்து,
காதலைக் கற்றுக்கொடுத்து,
நட்பை சொந்தமாக்கி,
தோல்விகளை தூரத்தள்ளி,
வெற்றிக்கு வழவமைத்து,
சதையை உடலாக்கி,
உணர்வை உயிராக்கி,

என்னை நானாகவும்,
என்னை நீங்களாகவும்,

பார்க்கும் உங்களுக்காக மட்டும்
எனையும் மாற்றிக்கொள்வேன்

## உன்னை விட அழகு யாரு அன்பே

அலுமினிய உருண்டையில்
கரி படிந்தது போல்
ஒரு கண்

சிதறிய
கரி துளிகள்
உடலில் படுகையில் மச்சமாய்
ஒட்டியதோ

அவள் கூந்தல்
பறந்து உலகம்
நிழல் கண்டது

சிரிப்பில் வெள்ளை
பற்கள் பிரதிபலித்து
உலகம் வெளிச்சம் கொண்டது

கோபத்தில் சூரிய மண்டலம்
வெப்பமயமாகிறது
பசி கொண்ட சிறுத்தை போல்
பாய்கிறாள் பாசத்தால்

இருப்பினும் காதல்
சொன்னால் என்னை என்ன
செய்வாள்

காசு கொடுத்த
கடன் காரன் போல்
அடிக்கடி திட்டுகிறாள்

பூனை நகத்து
பார்வையில் என்
மனதை கிழிக்கிறாள்

அஞ்சல் அட்டை
தகவல் போல்
தாமதம் செய்கிறாள்
காதல் சொல்ல...

## உன்னை வெறுக்கின்றேன்

நானும் காதலித்தேன்
எனை தீயென சுட்டெரிக்கும்
கண்களில்
காதல் ஒளி தெரிந்தபோது

நீயே என் வாழ்வென
உணர்ந்தேன்
வேண்டாம் என்று உதறிய நீ
எனை வாரி அணைத்த போது

இத்தனையும் நடிப்பு என
புரிந்தேன்
மீண்டும் நீயெனை உதறிய போது

உன்னை வெறுக்கின்றேன்
மனம் நிறைந்த வலிகளுடன்

## அச்சமில்லை

என் இருமலின்
இரைச்சலுக்கிடையில்
நடு இரவின்
நிசப்தங்களின் சத்தங்கள்

சட்டென விட்டுச்சென்ற தூக்கத்தினால்
கட்டிலின் மேல் விழித்துக்கொள்கின்றேன்

முதுமையும் தனிமையும் - என்
முதுகை இழுத்து
நகரமுடியாமல் செய்கிறது

இதயத்தில் வழியே
மெதுவாய் வலியொன்று பரவுகிறது
இதயத்துடிப்புகளின்
இடைவெளி குறைய
மூச்சுக்கும் மூச்சுக்குமிடையே
மிகப்பெரியதோர் இடைவெளி

என் கட்டளைகளுக்கு
கட்டுப்படாமல்
இமைகளோ
இறுக மூடிக்கொள்கிறது

மரணத்தின் கதவுகள்
திறப்பது போல் உணர்வு

விரைவில் நான்
மண்ணோடு மண்ணாகிவிடலாம்

ஆனாலும் எனக்கு அச்சமில்லை

எழுபது ஆண்டுகள்
வாழ்ந்து முடித்துவிட்ட நான்
இந்த மரணத்தின் நொடிக்காகத்தான்
இரண்டாண்டுகள் காத்திருக்கிறேன்

எனை விட்டு
விண்ணில் சென்ற
அவளோடு
அடுத்த
ஜென்மத்திலும் வாழ...

காதலுக்கும் மரணமுண்டு
காதலுக்கும் அழகுண்டு
அவள் சிரிக்கும் பொழுது

காதலுக்கும் மணமுண்டு
அவள் நுகரும் பொழுது


காதலுக்கும் மரணமுண்டு
அவள் என்னை நீ யாரென்று
கேட்கும் பொழுது

## நினைவுகள்

நாம் சேர்ந்து சென்ற
இடங்களில் எல்லாம்
இன்று நான் மட்டும்
செல்கிறேன்
உன் நினைவுகளுடன்...



# புனைகதைப் புயல்



தொடர் - 85

# முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி

ராம் வீடு செல்ல மனமின்றி புறப்பட்டான். வெளியில் வந்து ஆட்டோ பாக்கில் நின்ற ஆட்டோ ஒன்றை பிடித்துக்கொண்டு புறப்பட்டான். அப்போது அவனது போன் சினுங்கியது. வீட்டிலிருந்து தான் போன் வந்திருந்தது. சற்று முன்னர் தான் கதைத்திருந்தான் பிறகு ஏன் எடுக்கிறார்கள் என்ற யோசனையுடன் கதைத்தான்.

"அப்பா சொல்லுங்கோ."

"இல்லை பிள்ளைக்கு இப்ப என்னமாதிரி... எண்டு கேப்பம் எண்டு தான் எடுத்தனான்."

"அது பிரச்சினை யில்லையாம்... காலமை தான்விடுவினமாம்... இஞ்சை நிக்க ஏலாது தானே நான் வாறன். காலமை விட்டுடுவினம்."

"ஆ... சரி நாங்கள் இருப்பம் நீ நிண்டு வாறண்டால் பிரச்சினையில்லை. வதனான்ர அம்மாக்களுக்கு சொன்னனியே."

"இல்லை..."

"சரி பிரச்சினை யில்லைத்தானே காலமை சொல்லலாம்."

இரவு நின்மதியின்றி கழிந்தது. தமிழ் எந்தவித குழப்பமுமின்றி நித்திரை செய்தாள். ராம்குமார் அதிகாலையில் எழுந்து தேனீர் வைத்தான். பாண் கிடக்கு தானே என்று அப்பா கூறினார். தான் போகவேண்டும் என்பதால் அவனைக்கூப்பிட்டு கடைக்கு விடலாம் என வதனாவின் தம்பி சுதனுக்கு போன் எடுத்தான். எடுத்தபின்தான் யோசித்தான் வதனாபற்றி கூறபதட்டமடைவார்கள் என்பதை, அதனால் கட் செய்தான். ஆனால் அங்கிருந்து போன் வந்தது.

"ஆ... சுதன் ...."

"சொல்லுங்கோ அத்தான்."

"நீங்க இப்ப எங்காவது போறியளா?"
"இல்லையத்தான். ஏன்...."

"நான்... ஒருடத்துக்கு போக வேணும். கடையில நிக்கவேணும்."

"அதுக்கென்ன நான் டக்கெண்டு வாறன். அக்கா நிப்பள் தானே...."

"இம்.... சரி",

அவனுக்கு உண்மையை கூறினால் பிச்சினையாகிவிடும் என்பதால் கூறாது தவிர்த்தான். அவசர அவசரமாக கடையை திறந்தான். அதற்கிடையில் தமிழ் எழும்பி அம்மாவை தேட ஆரம்பித்தாள். ஆயினும் தாயை காணாததால் ராமுடன் ஒட்டிக்கொண்டாள். அதனால் அவளை கூட்டிப்போகும்படி அப்பா கூறினார். அவனும்

"தமிழ் நாங்க அம்மம்மா வீட்டை போவம்"

என்று கூறி அவளை வெளிக்கிடுத்தினாள். சுதன் இங்கு வந்து வீட்டுக்கு போன் செய்தால் நிலமை விபரீதமாகிவிடும் என்று அவன் வருவதற்கு முன்பே ராம் புறப்பட்டான்.

"நான் வருமட்டும் நிக்கச்சொல்லுங்க ஏதும் தேவை எண்டால் போன் எடுங்க."

என்று கூறி புறப்பட்டான். மோட்டார் சைக்கிலில் முன்னுக்கு இருந்து பயணம்செய்வதென்றால் அவளுக்கு அலாதிப்பிரியம். மகிழ்வுடன் 'டாட்டா' காட்டினாள். அந்த அதிகாலை நேரம் ராம் வந்திருப்பது அவர்களுக்கு அதிசயமாக இருந்தது. அவன் வருவது குறைவு. அவன் வதனாவை கூட்டிவருவதற்குத்தான் வருவான் இன்றும் வந்தவுடன் அம்மா...

"என்ன பிள்ள ரோட்டில இறங்கீட்டாளோ..."

என்று தான் கேட்டார், அதற்கு உடனடியாக பதில் கூறாது. தாமதித்த ராம்....

"அவள் வரேல்லை மாமி...."

"அப்ப தேப்பனும்மேளும் எங்க பாக்குகளோட வெளிக்கிட்டியள்."

"அது மாமி.... மாமா எங்க..."

"இங்கதான் நிக்கிறார்... ஏன்..."

"அது மாமி... இரவு வதனாவுக்கு... தலை சுத்தி.. சத்தியெடுத்து... ஏலாம வந்திட்டுது."

"இப்ப எப்பிடி...."

"இப்ப பிரச்சினையில்லை..."

என்று கூறியவன் யோசித்தான்.

"என்ன தம்பி... யோசிக்கிறாய்...."

"அது மாமி இரவு நாங்க பயத்தில ஆஸ்பத்திரிக்கு கொண்டு போட்டம். இனி காலம டொக்டர் பாத்துத்தான் விடுவினமாம்."

"தம்பி நீ பொய் சொல்லுறாய் என்ரபிள்ளைக்கு என்ன நடந்தது. ஐயோ அப்பா என்ர பிள்ளை ஆஸ்பத்திரிலையாம். ஓடிவாங்கோ...."

ஒப்பாரிவைக்க ஆரம்பித்தாள். கட்டுப்படுத்துவது எப்படி என்று தெரியாமல் தவித்தான் அதற்கிடையில் அப்பா வந்துவிட்டார்.

"என்ன தம்பி என்ன "

அம்மாவின் சத்தம் கேட்டு வரும்போதே பதட்டத்துடன் ஓடிவந்தார்.

"அது மாமா.. ஒரு பிரச்சினையுமில்லை. சும்மா தலைசுத்திசத்தியெடுத்தாள் அதுக்கு பயந்து கொஸ்பிற்றலுக்கு கொண்டு போயிட்டம் அவையள் காலம பாத்தாபிறகு தான் விடுவினமாம் கொஞ்சம் முதலும் கதைச்சனான்."

பதட்டத்தை சமாளிக்க அவளுடன்



கதைக்க வைத்தால் நல்லது என்று போனை எடுத்து வதனாவுக்கு கோல் எடுத்தான். எதிர்பார்த்திருந்தவள் போல உடனடியாக ஒகே கொடுத்தாள்.

"என்ன இன்னும் எழும்பயில்லையே."

நக்கலாக கேட்டாள். அம்மாவுக்கு முன் தன்னுடன் கதைக்க தயங்குபவள் இப்படி கதைக்கிறாளே என்று திடுக்கிட்டான்

"எங்க அம்மா."

"மாமி.. கன்ரீனுக்கு போட்டா 'ரீ' எடுக்க.. பாக்கிற நேரமாகுது போல வாற பிளான் இல்லையோ..."

"வாறதோ வருத்த மில்லாதாக்கள பாக்க ஏன் வரவேணும். உமக்கு வருத்தம் எண்டு மாமி குளம்பீற்றா கதையும்."

மாமியாரிடம் போனைக்குடுத்தான்.

"பிள்ளை என்னடி செய்யுது..."

என்று பதட்டத்தோடு தொடங்கியவர் கதைத்துக் கதைத்து நடக்க ஆரம்பித்தார். அப்படியே வீட்டின் பின்புறமாக சென்று விட்டார்.

"அப்ப இப்ப எப்பிடித்தம்பி."

"பிரச்சினையில்லை. காலமை வந்திடுவள், நாங்கள் பயந்திட்டம் அதுதான் அவசரப்பட்டு கொண்டு போனனாங்கள். அவங்கள் பதிஞ்சு உள்ள எடுத்திட்டா... காலமை தான் விடுவங்களாம்."

"அது அவங்கட நடைமுறை தானே. அப்ப இரவு தமிழ் குழப்படி செய்யேல்லையே."

"இல்லை.. அம்மாவும் இல்லை தர்சாவோட படுத்திட்டாள்."

"இப்ப போய் பாத்திட்டு நிண்டு கூட்டிவரலாம் தானே. இரவு கஸ்ரப்பட்டிருப்பியள். ஒருக்கா போன்பண்ணியிருக்கலாம் தானே"

"அது மாமா இப்பவே மாமி இப்பிடிக்குழம்பீற்றா போனிலை இரவு சொன்னா இன்னும் கூட பிரச்சினையாகீடும்."

"அதுவும் சரிதான்... நான் வெளிக்கிட்டு வாறன் மாமிய கூட்டிற்று போங்கோவன். இவள் எங்க வெளிக்கிடுறதுக்கு போன் கதைச்சுக்கொண்டிருக்கிறாள்... என்னப்பா... வெளிக்கிடன்."

வீட்டின் பின்புறம் நின்ற மனைவியை சத்தமாக கூப்பிட்டார்.

"கத்தாதேங்கோ வாறன்."

போன் கதைத்து முடிந்து மகிழ்வுடன் வந்தவர்.

'எல்லாம் நல்ல விடயம் தான்'

என்று சிரித்தபடி கூறி விட்டு வீட்டுக்குள் சென்றார். இதைக்கேட்ட ராமுக்கு தலை சுற்றியது.

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## பகவத்கீதை

**பகவத்கீதையின் சிறப்பு**

"அமிர்த சாத்திரம்" - அதாவது சாகாமலிருக்க வழி கற்றுக் கொடுக்கும் சாத்திரமாகிய பகவத்கீதையைச் சிலர் கொலை நூலாகப் பாவனை செய்கிறார்கள். துரியோதனாதிகளைக் கொல்லும்படி அர்ஜுனனைத் தூண்டு வதற்காகவே, இந்தப் பதினெட்டு அத்தியாயமும் கண்ணபிரானால் கூறப்பட்டனவாதலால், இது கொலைக்குத் தூண்டுவதையே தனி நோக்கமாகவுடைய நூலென்று சிலர் பேசுகிறார்கள். கொலைசெய்யச்சொல்ல வந்த இடத்தே, இத்தனை வேதாந்தமும், இத்தனை சத்வ குணமும், இத்தனை துக்க நிவர்த்தியும் இத்தனை சாகாதிருக்க வழியும் பேசப்படுவதனையே அச்சிலர் கருதுகின்றனர்.

இவ்வுலகில் அனைவரும் மன உளைச்சலுடன் வாழ்கின்றனர். அல்லது அச்சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர். இம்மன உளைச்சல் பல்வேறு விதமான நோய்களுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது. மனிதன் இம்மன உளைச்சலால் பல துன்பங்களுக்கு நேரிடையாகவும், மறைமுகமா கவும் ஆளாகின்றான். இத்தகைய துன்பங்களில் இருந்து அவன் விடுபட்டு மன அமைதியுடன் வாழ வேண்டும். இத்தகைய மன அமைதியுடன் வாழும் வாழ்க்கையைப் பற்றியே பகவத்கீதை எடுத்துரைக்கின்றது.

உடலும் உள்ளமும் ஒன்றை ஒன்று சார்ந்து விளங்குகின்றன. உளத்திற்கு ஊறு நேரிட்டால் அது உடலைப் பாதிக்கின்றது. உளம் அமைதி அடைந்தால் உடல் நலம் பெறுகின்றது. அத்தகைய உள அமைதியை நல்கும் உன்னத நூலாகப் பகவத்கீதை இருக்கின்றது. போர்க்களம் என்பது இவ்வுலக வாழ்க்கை. அதில் ஏற்படும் பல்வேறு நிகழ்வுகள் அனைத்தும் வாழ்க்கை நிகழ்ச்சிகள். போராட்டம் நிறைந்த வாழ்வில் மனம் தடுமாற்றம் அடையாது வாழ்வதே உண்மையான வாழ்க்கை. அதுவே யோக வாழ்வு. இத்தகைய வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது என்று கூறும் வாழ்வியல் சாஸ்திரமாக பகவத்கீதை அமைந்திலங்குகிறது.

**பகவத் கீதை தரும் யோகம் பற்றிய விளக்கம்**

பகவத்கீதைமனம்இறைவனுடன் இணையும் வழியை எடுத்துரைக்கின்றது. இறைவனுடன் உயிரானது இணைகின்ற நெறிகளை யோகமாகக் கூறுகி றது. யோகமாவது சமத்துவம் ஆகும். இதனை, "மத்வம் யோக உச்யதே" என்று பகவத்கீதை மொழிகிறது. அதாவது, பிறி தொரு பொருளைக் கவனிக்குமிடத்து அப்போது மனதில் எவ்விதமான சஞ்சலமேனும் சலிப்பேனும் பயமேனும் இன்றி, அதை ஆழ்த்து, மனம் முழுவ தையும் அதனுடன் லயப்படுத்திக் கவனிப்பதாகிய பயிற்சி என்பது இதன் நுவல் பொருளாகும்.

நீ ஒரு பொருளுடன் உறவா டும் போது, உன் மனம் முழுதும் அப்பொருளின் வடிவாக மாறிவிட வேண்டும். அப்போதுதான் அந்தப் பொருளை நீ நன்றாக அறிந்தவனாவாய். "யோகத குரு கர்மாணி" என்று பகவத்கீதையில் கடவுள் கூறுகிறார். "யோகத்தில்நின்றுதொழில்களைச்செய்" என்பது இதன் விளக்கமாகும். யோகநெறி யில் வாழ்பவன் யோகி ஆவான். யோகி தன் அறிவைக் கடவுளின் அறிவு போல விசாலப்படுத்திக் கொள்ளுதல் இயலும். ஏனென்றால், ஊன்றிக் கவனிக்கும் வழக்கும் அவனுக்குத் தெளிவாக அர்த்தமாய் விடுகிறது.

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

**கேள்வி:–** இது தொடர்பாக முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்களால் முதலில் இனப்படுகொலை இல்லையென்ற மாறுபட்டகருத்தும், பின்னர் இனப்படுகொலைதான் மேற்கொள்ளப்பட்டது என்ற கருத்தும் வடமாகாண சபையில் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:–** ஆரம்ப கட்டத்தில் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனின் கருத்திற்காக அவருக்கும், எனக்கும் சில முரண்பாடுகள் இருந்தன. இனப்படுகொலைசம்பந்தமான முக்கியமான தகவல்களை அறிந்து பேச வேண்டும் என்ற காரணத்தினால் அவர் காலம் தாமதித்து தற்பொழுது இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்று கூறியிருக்கிறார் என நான் நினைக்கின்றேன். இதற்கு முன்னர் இனப்படுகொலை என்று வடமாகாண சபைஉறுப்பினர்கள்கூறியபொழுது அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் ஒரு நீதிபதி என்றவகையிலும், அறிவாளி என்றவகையிலும் அதை நன்கு ஆராய்ந்து கூறியிருக்கின்றார். நல்ல விடயம் தான். சட்டம் தெரிந்தவர் என்றவகையில் அவர் அதை நிரூபித்துச் சொல்லக்கூடிய தகுதி அவருக்கு இருக்கின்றது.

**கேள்வி:–** தமிழினம் தொடர்பாக சிங்கள மக்களுடைய சிந்தனை, நிலைப்பாடு என்ன? என நினைக்கிறீர்கள்.

**பதில்:–** சிங்களவர்களைப் பொறுத்த வரையில் இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதே அவர்களது கொள்கை. அனைவரும் மனிதர்கள் தான் என்பதை அவர்கள் நினைக்க வேண்டும். அதற்காக ஒரு சட்டம் வகுக்கப்பட்டு அனைவருக்கும் சமத்துவமான ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அதற்கு சிங்களதேசம் ஒரு போதும் விரும்புவதில்லை. இதுவரை காலமும் சிங்களதேசத்திற்கு இது தொடர்பாக தெளிவு இல்லை என்று கூறமுடியாது. இதனை அவர்கள் வேண்டுமென்றே செய்கின்றார்கள். யாராவது ஒரு அரசாங்கம்தமிழ்மக்களுக்கான தீர்வினை சரியாகக் கொண்டு வருகின்றபோது அதற்கு எதிராகச் செயற்படுகின்றவர்கள், வேறு பல காரணங்களைக் காட்டி அக்கட்சியினுடைய செயற்பாடுகளை அழித்து, தமிழ் மக்களுக்கு நாட்டைக் வழங்கப்போகின்றார்கள் என்ற ஒரு பிரம்மையை உருவாக்குகின்றார்கள். முன்வருகின்றவர்கள் என்பதே உண்மை.

**கேள்வி:–** விரைவில் பாராளுமன்ற தேர்தலை எதிர்நோக்கவுள்ள சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கின்றது. மறு பக்கத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எதிர்க்கட்சியாக உருவாகக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அவ்வாறு எதிர்க்கட்சியாக TNA பாராளுமன்றத்திலே அங்கம் வகிக்கின்ற போது, தமிழ்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பது என்னவாகும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**பதில்:–** TNA எதிர்க்கட்சியாக வந்தாலும், அரசாங்கத்துடன் இணைந்து அவர்களது செயற்பாடுகளை முன்னெடுத்தாலும், மக்களுடைய அடிப்படை நோக்கம் தமக்கான சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்பதுதான். சிங்கள மக்களுக்கு மாத்திரமே இந்நாட்டில் உரி மைகள் இருக்கின்றது ஏனையவர்களுக்கு உரிமைகள் இல்லை என்று அர்த்தமில்லை. தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தராவிட்டால் தொடர்ந்தும் சமாதானத்தை நாட்டில் எதிர்பார்க்க இயலாது.

தொடரும்...

## நபிகளின் பொன்மொழிகள்



பகைமை கொள்பவர்களும், தீயவர்களும் (தான்) அல்லாஹ்விடத்தில்கெட்டவர்கள் என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள்கூறினார்கள். அறிவிப்பவர் : அபுதர்தா (ரழி). நூல் : திர்மிதி

கடுமையாகச் சண்டையிடுபவன், மன தில் பகைமையை வைத்திருப்பவன் அல்லாஹ்விடம் மிகவும் வெறுப்புக்குரியவன் ஆவான் என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா (ரழி). நூல்: முஸ்லிம்.

பொறாமை கொள்ளாதிருக்கும்படி உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில் நெருப்பு விறகைத் தின்று விடுவதைப் போன்று பொறாமை நற்செயல்களைத் தின்று விடும் என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி). நூல்: அபூதாவூத்.

நான் உங்களை சந்தேகப்பட வேண்டாமென்று எச்சரிக்கின்றேன். ஏனெனில், செய்திகளில் மிகவும் பொய்யானது சந்தேகமேயாகும் என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி). நூ ல்கள் : புகாரி, முஸ்லிம்.

எவன் ஒரு முஸ்லிமுக்கு தீங்கு இழைக்கின்றானோ, அல்லாஹ் அவனுக்கு தீங்கிழைப்பான். எவன் ஒரு முஸ்லிமைகஷ்டத்தில் ஆழ்த்துகிறானோ, அல்லாஹ் அவனை கஷ்டத்தில் ஆழ்த்துவான் என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஸிர்மா (ரழி). நூல்கள்: அபூதாவூத், திர்மிதீ.

செயல்களில் சிறந்தது தொழுகையை அதன் நேரத்தில் தொழுவதாகும் என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : இப்னு மஸ்வூத் (ரழி). நூல்கள் : புஹாரி, முஸ்லிம்.


நமக்கும் அவர்களுக்குமிடையே (காபிர்களுக்குமிடையே) இறைவன் ஏற்படுத்திய வித்தியாசம் தொழுகை யேயாகும். யார் அதனை விட்டுவிட்டாரோ அவர் காஃபிராகி விட்டார் என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : புரைதா (ரழி). நூல்கள் : திர்மிதி, அபூதாவுத், அஹ்மது, இப்னுமாஜா, நஸ யீ, இப்னு ஹிப்பான்.

இரண்டு தொழுகைகள் முனாஃபிக்கீன்களுக்கு பாரமாக இருக்கிறது. ஃபஜ்ருடைய ஜமாஅத்தும், இஷாவு டைய ஜாமாஅத்தும். இந்த இரண்டிலும் உள்ள நன்மைகளை அவர்கள் அறிவார்களேயானால், பள்ளிக்கு தவழ்ந்து வந்தாயினும் தொழுகையில் கலந்து விடுவர் என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹு ரைரா (ரழி). நூல்கள் : புஹாரி, முஸ்லிம், முஅத்தா, அபூதாவூத், திர்மிதீ, நஸயி.

இறந்தவர் அடக்கம் செய்யப்பட்ட இடம் (கப்ரு) மற்றும் குளியலறையைத் தவிர, பூமி முழுவதுமே அல்லாஹ்வை தொழும் இடம் (மஸ்ஜித்) ஆகும். என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூ ஸயீத் அல் குத்ரி(ரழி). நூல் :திர்மிதீ.

தொழுகையில் இமாமுக்கு மறதி ஏற்படும்போது ஆண்கள் "ஸூப்ஹானல்லாஹ்" என்று கூறவேண்டும், பெண்கள் கையைத் தட்ட வேண்டும் என்று அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி). நூ ல்கள் : புஹாரி, முஸ்லிம்.

## சாலொமோனின் உன்னதப்பாட்டு



நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்கின் லீலிபுஷ்பமுமாயிருக்கிறேன்.

முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமா னவளும் இருக்கிறாள்.

காட்டுமரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார். அதன் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன். அதின் கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது.

என்னை விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டுபோனார். என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே.

திராட்சை ரசத்தால் என்னைத் தேற்றுங்கள். கிச்சிலிப்பழங்களால் என்னை ஆற்றுங்கள். நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்.

அவர் இடதுகை என் தலையின்கீழ் இருக்கிறது. அவர் வலதுகை என்னை அணைத்துக்கொள்ளுகிறது.

எருசலேமின் குமாரத்திகளே எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகு மட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலுமிருக்கும்படி வெளிமான்களின் மேலும் வெளியின் மரைகள் மேலும் உங்களை ஆணையிடுகிறேன்.


இது என் நேசருடைய சத்தம். இதோ அவர் மலைகள்மேல் குதித்தும் மேடுகள் மேல் துள்ளியும் வருகிறார்.

என் நேசர் வெளிமானுக்கும் மரைக்குட்டிக்கும் ஒப்பாயிருக்கிறார். இதோ அவர் எங்கள் மதிலுக்குப் புறம்பே நின்று பலகணி வழியாய்ப்பார்த்து கிராதி யின் வழியாய்த் தமது மலர்ந்த முகத்தைக் காண்பிக்கிறார்.

என் நேசர் என்னோடே பேசி என் பிரி யமே! என் ரூபவதியே! எழுந்துவா.

இதோ மாரிகாலம் சென்றது. மழை பெய்து ஒழிந்தது.

பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது. குருவிகள் பாடுங்காலம் வந்தது. காட்டுப்புறாவின் சத்தம் நமது தேசத்தில் கேட்கப்படுகிறது.



# அறிவியல் உலகம்

## திமிங்கலங்களின் எலும்பை உண்ணும் புழுக்கள் கண்டுபிடிப்பு



கடலில் பல வருடங்களுக்கு முன் வாழ்ந்து இறந்த திமிங்கலங்கள் மற்றும் Plesiosaur எனப்படும் டைனோசர் இனத்தைச் சேர்ந்த கடல்வாழ் உயிரினங்கள் போன்றவற்றின் எலும்புகளை உண்ணும் Zombie எனும் புழுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த புழுக்கள் ஏறத்தாழ 100 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இறந்துள்ளன. மேற்படி உயிரினங்களின் எலும்புகளை துண்டு துண்டுகளாக்கி மெல்லுவதாக ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குடும்பத்தைச் சேர்ந்த புழுக் கள் 2002ம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாக குறித்த ஆய்வில் ஈடுபட்ட Plym outh பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Dr. Nich olas Higgs என்பவர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த புழுக்கள் கடலின் மேல் மட்டத்திலிருந்து 4 கிலோ மீற்றர்கள் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## திரவ நிலையில் நீர் இருப்பதற்கான ஆதாரம் கண்டுபிடிப்பு



நான்கு வருடங்களுக்கு மேலாக செவ்வாய் கிரகத்தைப் பற்றி ஆராய்ந்து வரும் கியூரியோசிட்டி ரோவர் (Curios ity rover) விண்கலம் தற்போது அங்கு திரவ நிலையில் நீர் இருப்பதற்கான ஆதாரத்தை கண்டறிந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தநீரானது செவ்வாயில் காணப்படும் Perchlorate எனும் இரசாயனப் பதார்த்தத்தினால் வளிமண்டலத்திலுள்ள நீராவியை உறுஞ்சுவதனால் சேமிக்கப்பட்டிருக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். தவிர இங்குள்ள திரவங்கள் 70 டிகிரி செல்சியஸ் எனும் மறை வெப்பநிலையில் உறைந்து மிகவும் குளிர்ச்சியாக இருக்கலாம் எனவும் இதனால் நுண்ணுயிர்கள் வாழும் சாத்தியம் இருப்பதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் செவ்வாய் கிரகத்தின் மேற்பகுதியிலுள்ள 15 சென்ரி மீற்றர் உயரமான மணலில் உயர் மட்டத்திலான கதிர்ப்பு நடைபெறுவதனால் உயிர் வாழ்க்கைக்கு சவாலாக விளங்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அட்டகாசமான வசதிகளுடன் அறிமுகமாகும் Huawei P8



Huawei நிறுவனம் Huawei P8 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. இக்கைப்பேசியானது 5.2 அங்குல அளவு டையதும், 1920 x 1080 Pixel Resolu tion உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், 2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Processor, பிர தான நினைவகமாக 3GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

மேலும் Android 5.0 Lollipop இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இக்கைப்பேசியில் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா என்பனவும் தரப்பட்டுள்ளது. இதன் விலையானது 499 யூரோக்கள் ஆகும்.

## ரத்தத்தைத் தூய்மை செய்யும் புளிச்சக்கீரை



புளிச்சக்கீரை புளிப்புச்சுவை நிறைந்தது என்பதால், இந்தக் கீரை புளிச்சக்கீரையானது. புளிச்சக்கீரைக்கு காசினிக்கீரை என்ற பெயரும் உண்டு. இது ஆந்திரா பகுதியில் 'கோங்குரா' என்ற பெயரில் பிரசித்தி பெற்றது. கோங்குரா சட்னி, கோங்குரா துவை யல், கோங்குரா தொக்கு போன்றவை சுவைக்கு பெயர் பெற்றவை.

இரும்புச்சத்தும், சுண்ணாம்புச்சத்தும் நிறைந்த இந்த புளிச்சக்கீரையை சாப்பிடுவதால் ரத்தம் தூய்மை பெறு வதோடு மலச்சிக்கல் என்ற பேச்சுக்கே இடம் இருக்காது. உடல் குளிர்ச்சி பெறுவதோடு மந்தம் நீங்கி விந்து கெட்டிப்படும். பொதுவாக புளிச்சக்கீரையுடன் மிளகாய் சேர்த்து வேக வைத்து உப்பு சேர்த்து துவையலா கச் செய்து சாப்பிடுவார்கள்.

வாதநோய் உள்ளவர்கள் இரண்டு, மூன்று நாட்களுக்கு ஒருமுறை புளிச்சக்கீரையை சமைத்து சாப்பிட்டு வந்தால் காலப்போக்கில் அவர்களுக்கு வாத நோய் தணிந்துவிடும். இதேபோல், மலச்சிக்கலால் கஷ்டப்படுகிறவர்கள் இரண்டு, மூன்று நாட்களுக்கு ஒருமுறை புளிச்சக்கீரை சாப்பிட்டு வந்தால் பிரச்சினை தீரும்.

சொறி, சிரங்கு உள்ளவர்கள் அதற்கான மேல்பூச்சு மருந்து போட்டு வரும் நேரங்களில் இந்த புளிச்சக்கீரையை சமைத்து சாதத்துடன் சேர்த்துச் சாப்பிடுவது குணம் பெறு தலை விரைவுபடுத்தும்.

புளிச்சக்கீரையை காய வைத்து அதனுடன் சம அளவு பாசிப்பருப்பு (பச்சைப்பருப்பு), ஜாதிக்காய், சுக்கு, மிளகு, சீரகம், காய்ந்த மிளகாய் சேர்த்து பொடி செய்து உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் ஆண்களுக்கான குழந்தையின்மை குறைபாடு விலகும்.

இந்தப் பொடியை காலை மற்றும் மதிய உணவில் ஒரு ஸ்பூன் அளவு சேர்த்துநெய் அல்லதுநல்லெண்ணெய் கலந்து 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் ஆண்மைக் குறைபாடு சரியாகும். பெண்களும் இதை சாப்பிடுவதால் தாம்பத்திய உறவு பலப்படும்.


## எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எச்சரிக்கை



அண்மைக்காலமாக ஆபிரிக்க நாடுகள் சிலவற்றினை எபோலா எனும் வைரஸ் நோய் கதிகலங்கச் செய்து வருகின்றது. உயிரைப் பலியெடுக்கும் அளவிற்கு இந்த கொடிய நோய் பற்றி உலக சுகாதார நிறுவனம் புதிய எச்சரிக்கை ஒன்றினை விடுத்துள்ளது. அதாவது இந்நோய்த்தொற்றுக்கு உள்ளானவர்கள் உடலுறவின் போது பாதுகாப்பான முறைகளை கையாளு மாறு அறிவுறுத்தியுள்ளது.

உடலுறவின் போது எபோலா வைரஸ் ஆனது ஒருவரிலிருந்து மற்றொருவருக்கு பரவும் ஆபத்து காணப்படுவதனால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கையானது எபோலா வைரஸ் தாக்கம் கண்டறியப்பட்டு ஆறு மாதங்களின் பின்னர் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## மைக்ரோசொப்ட் சத்யா நாடெள்ளாவுக்கு அமெரிக்க விருது



அமெரிக்க அரசு, மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி, சத்யா நாடெள்ளாவிற்கு, 'மாற்றத்தின் தலைவன்' என்ற விருதை வழங்கவுள்ளது. ஐதராபாத்தில் பிறந்து, பெங்களூர் பல்கலையில், பொறியியல் பட்டம் பெற்ற சத்யா நாடெள்ளா, 47, மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் 1992ம் ஆண்டு சேர்ந்து, படிப்படியாக உயர்ந்து வந்துள்ளார். மேலும் இவர், மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் ஊழியர் நலன் உள்ளிட்ட, பல்வேறு மாற்றங்களை செய்துள்ளார்.

அதுமட்டுமின்றி, மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கு பொருட்களை வழங்கும், ஏராளமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு, ஆண்டுக்கு, ஊதியத்துடன் 15 நாள் விடுப்பு சலுகையை வழங்கியுள்ளார். இத்தகைய செயல்களை பாராட்டி, அவருக்கு விருது வழங்கப்பட உள்ளதாக, வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் ஒபாமா, இவ்விருதினை வழங்கவுள்ளார்.

## அப்பிள் கடிகாரம் பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள்



அப்பிள் வோட்ச் (Apple Watch) வடிவமைப்பில் ஹாரோலோஜி பாரம்பரியம் கலந்திருப்பதோடு பார்க்க தனித்துவம் வாய்ந்ததாக காட்சியளிக்கின்றது. ஐபோன்களை போன்றே அப்பிள் வோட்ச்களின் டிஸ்ப்ளே உறுதியாகவும், கீறல் படாத வாறும் வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்பிள் வோட்சில் உள்ள கஸ்டம் ஃபிரன்ட் தொழில்நுட்பம் சிறிய டிஸ்ப்ளேவில் வார்த்தைகளை துள்ளியமாகவும் தெளிவாகவும் காண்பிக்கும். தனித்துவம் வாய்ந்த அனுபவத்தை வழங்க அப்பிள் நிறுவனம் பல நிபுணர்களின் ஆலோசனைகளை பரிசீலனை செய்து அதற்கேற்ப அப்பிள் வோட்சை உருவாக்கியுள்ளது. புதிய வகை வடிவமைப்பின் மூலம் அப்பிள் வோட்ச் சூரிய புகைப்படத்தை கொண்டு அதற்கேற்ப நேரத்தை காண்பிக்கும்.

அப்பிள்வோட்ச்டிஸ்ப்ளேவில்ஒவ்வொரு முறை உங்களது மணிக்கட்டை தூக்கும் போதும் அழகிய பூ மலர்வது போன்ற வீடியோ படம் தெரியும். அப்பிள் வோட்சில் 2 பொத்தான்கள் (Buttons) மட்டுமே உள்ளன. மற்ற படி அனைத்துமே தொடு திரையாக (Touch Screen) அமைந்துள்ளது. அப்பிள் வோட்சை ஒரு முறை முழுவதும் ஜார்ச் செய்தால் போதும், 18 மணிநேரம் பயன்படுத்த முடியும்.

## கற்பூரவள்ளியின் மருத்துவ பயன்கள்



கற்பூரவள்ளி பெரும்பாலும் விட்டிலேயே வளர்க்கலாம். இது மிக சிறந்த மருத்துவ குணம் கொண்ட செடி. கற்பூரவள்ளி (Coleus aromaticus) ஒரு மருத்துவ மூலிகைச் செடியாகும். கற்பூரவள்ளியின் மருத்துவ பயன்களைப் பார்ப்போமானால் கற்பூரவள்ளி தாவரத்தின் பாகங்கள் இருமல், சளி, ஜலதோஷம் போன்ற நோய்களுக்கு முக்கிய மருந்து.

வியர்வை பெருக்கியாகவும், காய்ச்சல் தணிக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. கற்பூரவள்ளியின் இலைச்சாற்றை சர்க்கரை கலந்து குழந்தைகளுக்கு கொடுக்க சீதள இருமல் தீரும். இலைச்சாறு, நல்லெண்ணெய், சர்க்கரை இவற்றை நன்கு கலக்கி நெற்றியில் பற்றுப் போடத் தலைவலி நீங்கும். சூட்டைத் தணிக்கும். இலை, காம்புகளைக் குடிநீராக்கிக் கொடுக்க இருமல், சளிக்காச்சல் போகும். இதன் இலைகளை எடுத்து கழுவி சாறெடுத்து இரண்டு மில்லி சாருடன் எட்டு மில்லி தேனுடன் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் மார்பு சளி கட்டுக்குள் வரும். இந்த மூலிகை குழந்தைகளின் அஜீரண வாந்தியை நிறுத்தக்கூடிய மருத்துவ குணத்தைப் பெற்றிருக்கிறது. கட்டிகளுக்கு இந்த இலையை அரைத்துக் கட்ட கட்டிகள் கரையும்.

தசைகள் சுருங்குவதைத் தடுக்கும். வயிறு சம்பந்தப்பட்ட நோய், இளைப்பு நோய்களுக்கு உள் மருந்தாகவும், கண் அழற்சிக்கும் இதன் சாறு மேல் பூச்சாக தடவ குணம் தரும். மருத்துவதுறையில் இது நரம்புகளுக்குச் சத்து மருந்தாகிறது. மனக் கோளாறுகளைச் சரிசெய்யும். சிறுநீரை எளிதில் வெளிக் கொண ரவும் பரிந்துரைக்கப்படுகிறது. இரத்தத்தை சுத்தப்படுத்தும் தாவரமா கவும் கருதப்படுகிறது. குழந்தைக்கு குடிப்பதற்காக கொதிக்க வைக்கும் நீரில், சுத்தமாக அலசி வைத்திருக்கும் 4 அல்லது 5 கற்பூரவள்ளி இலைகளைப் போட்டு சிறிது நேரம் கழித்து எடுத்துவிடுங்கள். இலையின் சாறு முழுமையாக நீரில் இறங்கி தண்ணீர் லேசாக பச்சை நிறத்தை அடைந்து இருக்கும். அந்த நீரை மட்டும் குழந்தை பருகுவதற்குக் கொடுங்கள். 2 அல்லது 3 நாட்களுக்கு இதுபோன்ற நீரையே கொடுத்து வாருங்கள். குழந்தைக்கு சளியின் தீவிரம் கட்டுப்படும்.



# விளையாட்டு உலகம்

## பயிற்சியாளர் பதவியிலிருந்து டொனால்ட் விலகல்



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர் அலன் டொனால்ட் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக கடந்த 2011ம் ஆண்டு ஜுன் மாதம் ஆலன் டொனால்ட் நியமிக்கப்பட்டார்.

தென்னாபிரிக்க முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான 48 வயதான டொனால்ட் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 'கிரிக்கெட் விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியுடன் ஏதாவது ஒரு வகையில் பணியாற்ற வேண்டும் என்று கனவு கண்டேன். அந்த வாய்ப்பு கிடைத்தது நம்ப முடியாத மிகப்பெரிய கௌரவமாகும்.

எனது வாழ்க்கையில் கடந்த 4 ஆண்டுகள் மிகச்சிறப்பானது. உலகின் சிறந்த பந்து வீச்சு குழுவினருடன் பணியாற்றியது மிகவும் திருப்தி அளித்தது. உலக கோப்பை முடிந்ததும் விலகுவதற்கு இதுவே சரியான நேரம் என்று உணர்ந்தேன். சில மறக்க முடியாத நினைவு மற்றும் அனுபவங்களுடன் இப்பணியில் இருந்து விலகுகிறேன்' என்று அதில் கூறியுள்ளார்.

## மேக்ஸ்வெல் சொத்து,ஷேவாக் தூண் – ப்ரீத்தி ஜிந்தா



ஐபிஎல் 8வது தொடரில் பஞ்சாப் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் என்று அந்த அணியின் உரிமையாளர்களில் ஒருவரான நடிகை ப்ரீத்தி ஜிந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார். கடந்த ஐபிஎல் சீசனில் பட்டையை கிளப்பிய பஞ்சாப் அணி, இந்த தொடரில் 2 போட்டிகளில் விளையாடி ஒரு வெற்றி, ஒரு தோல்வியுடன் 2 புள்ளிகள் பெற்றுள்ளது. இந்நிலையில் பஞ்சாப் அணியின் செயற்பாடு குறித்து ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த பிரீத்தி ஜிந்தா, பெய்லி, மேக்ஸ்வெல், மிட்செல் ஜான்சன், ஷோன் மார்ஷ் போன்ற அவுஸ்திரேலிய வீரர்கள் எங்கள் அணியில் இருப்பது மிகப்பெரிய சொத்தாகும்.

ஆனால் இந்திய வீரர்கள் தான் அணிக்கு பலம். ஷேவாக் அணியில் இருப்பது மிகப்பெரிய பலமாகும். கடந்த ஆண்டு அவர் சென்னை அணிக்கு எதிராக அதிரடியாக விளையாடியதை யாராலும் மறக்க இயலாது. கடந்த காலங்களில் ஐபிஎல் போட்டியில் நான் பார்த்த சிறந்த ஆட்டம் இதுவாகும். மேலும் பஞ்சாப் அணியை விற்கபோவதாக கூறப்படுவது வதந்தியே. எங்கள் அணிக்கு அதிகமான லாபம் வருகிறது. வீரர்கள் தொடர்ந்து சிறப்பாக ஆடுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## புறக்கணிக்கப்படும் இலங்கை வீரர்கள் - திசர பெரேரா



ஐபிஎல் போட்டிகளில் சென்னையில் விளையாட இலங்கை வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பது கவலையளிக்கிறது என்று சகலதுறை ஆட்டக்காரர் திசர பெரேரா தெரிவித்துள்ளார். ஐபிஎல் தொடரில் கடந்த 2 வருடமாக இலங்கை வீரர்கள் சென்னையில் நடக்கும் போட்டியில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டது. இந்த தடை வீரர்களின் பாதுகாப்பு காரணத்திற்காக கடைபிடிக்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டும் சென்னையில் இலங்கை வீரர்கள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தற்போது ஐபிஎல் போட்டிகளில் விளையாடி வரும் மலிங்கா, திசர பெரேரா, மேத்யூஸ் ஆகியோரால் சென்னையில் நடக்கும் போட்டிகளில் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இது தங்களுக்கு மிகவும் வருத்தமளிக்கும் விடயமாக இருக்கிறது என்று பஞ்சாப் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் திசர பெரேரா கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், இலங்கை வீரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த தடை, தனிப்பட்ட முறையில் என்னை மிகவும் பாதித்துள்ளது. சில வருடங்களாக இரு அணிகளுக்கு இடையேயான ஒற்றுமை அதிகரித்துள்ளது. இருப்பினும் எங்கள் வீரர்களை இந்த சீசனில் அதிகம் தெரிவு செய்யவில்லை. இதில் என்ன காரணம் இருக்கின்றது என்று எனக்கு தெரிவில்லை என்று கூறியுள்ளார். பஞ்சாப் அணி பற்றி மேலும் கூறுகையில், பஞ்சாப் அணியில் திறமை வாய்ந்த வெளிநாட்டு வீரர்கள் அதிகம் உள்ளனர். எனவே 11 பேர் கொண்ட அணியில் இடம் கிடைப்பது என்பது கடினம். இருப்பினும் நான் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## இந்திய அணிக்கு மயங்க் அகர்வால் – தட்டிக் கொடுக்கும் யுவராஜ்




பஞ்சாப் அணிக்கு எதிரான ஐபிஎல் லீக் ஆட்டத்தில் அதிரடியால் அரைசதம் கடந்த டெல்லி வீரர் மயங்க் அகர்வாலுக்கு சக வீரர் யுவராஜ் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார். புனேயில் நடந்த லீக் ஆட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப்பை தோற்கடித்தது.

இந்த ஆட்டத்தில் டெல்லி அணியின் மயங்க் அகர்வால் (48 பந்தில் 68 ஓட்டங்கள்), யுவராஜ்சிங் (54 ஓட்டங்கள், 5 பவுண்டரி, 3 சிக்சர்) ஆகியோரின் அதிரடி ஆட்டத்தால் ஒரு பந்து எஞ்சியிருந்த போது டெல்லி அணி வெற்றி கண்டது. இதன் பின்னர் மயங்க் அகர்வாலை வெகுவாக பாராட்டிய யுவராஜ்சிங் கூறுகையில், 'அகர்வாலின் அதிரடி மிக அருமையாக இருந்தது. ஐபி.எல் தொடக்கத்தில் இருந்தே அவரிடம் பேசி வருகிறேன்.

அவர் ஒரு திறமையான வீரர். இந்தப் போட்டியில் பிரமாதமாக விளையாடினார். கைதேர்ந்த துடுப்பாட்டக்காரர் போன்று பக்குவமாக ஆடுகிறார். இந்திய அணிக்காக அவர் விரைவில் விளையாடுவார் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

## புதிய சாதனை படைத்த கிறிஸ் கெய்ல்



ஐபிஎல் தொடரில் 200 சிக்சர்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை பெங்களுர் அணியின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல் படைத்துள்ளார். ஐபிஎல் லீக் ஆட்டத்தில் றொயல் சேலஞ்சர்ஸ் பெங்களுர் அணியும், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியும் மோதின. இதில் 8 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களுர் அணியை வீழ்த்தியது சன்ரைசர்ஸ்.

இந்த ஆட்டத்தில் பவுல்ட் வீசிய முதல் ஓவரின் 3வது பந்தை சிக்சருக்கு பறக்க விட்டார் கெய்ல். இதன் மூலம் ஐபிஎல் தொடரில் அவரது சிக்சர் எண்ணிக்கை 199ல் இருந்து 200ஐ தொட்டது. இந்த ஒரே சிக்சர் மூலம் 200 சிக்சர் அடித்த முதல் வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார் கெய்ல்.

## புதிய மைல்கல்லை எட்டிய விரேந்திர ஷேவாக்



ஐபிஎல் தொடரில் பஞ்சாப் அணிக்காக விளையாடி வரும் அதிரடி வீரர் ஷேவாக் டி20 கிரிக்கெட் போட்டியில் 4000 ஓட்டங்களை கடந்த வீரர் என்ற பெருமையை பெற்றார். டெல்லி அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் ஷேவாக் 47 ஓட்டங்கள் குவித்திருந்தார்.

அவர் 15 ஓட்டங்கள் எடுத்த போது டி20 கிரிக்கெட்டில் 4000 ஓட்டங்கள் எடுத்த 25வது வீரர் ஆனார். அவர் இதுவரை 151 போட்டிகளில் விளையாடி 4,032 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அது மட்டுமல்லாது ஐபிஎல் வரலாற்றில் ஒட்டுமொத்தமாக அதிக முறை (438 முறை, 99 போட்டி, 332 பவுண்டரி, 106 சிக்சர்) பந்தை எல்லை கோட்டுக்கு வெளியே அனுப்பிய வீரர்களில் முதலிடம் பெற்றார். இவருக்கு அடுத்த இடத்தில் பெங்களுர் வீரர் கிறிஸ் கெய்ல் (70 போட்டி, 232 பவுண்டரி, 200 சிக்சர்) உள்ளார்.

## வரலாற்று சாதனையை பதிவு செய்தார் சானியா மிர்சா



இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா இரட்டையர் பிரிவில் உலகின் முதல்தர டென்னிஸ் வீராங்கனையாக முன்னேறி புதிய வரலாற்று சாதனை படைத்துள்ளார். இந்தியாவிலிருந்து டென்னிஸ் வீராங்கனை ஒருவர் இப்படிப்பட்ட சாதனையை நிகழ்த்தியது இதுவே முதன்முறையாகும். டென்னிஸ் உலகில் பரபரப்பான வெற்றிகளை தொடர்ந்து பதிவு செய்து வரும் மார்டினா ஹிங்கிஸ் - சானியா மிர்சா ஜோடி, WTA Family Circle ஊரி போட்டியில் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளது.

சார்லஸ்டனில் நடந்த lop-sided final ஆட்டத்தில் காஸேடெல்லாகுவா-டாரிஜா ஜூராக் ஜோடியை 6–0, 6–4 என்ற செட் கணக்கில் வெறும் 57 நிமிடங்களுக்குள் வென்று அசத்தியிருக்கிறது சானியா–ஹிங்கிஸ் ஜோடி. சர்வதேச தரவரிசையில் இந்த போட்டியில் வெற்றி பெற்றதன் வாயிலாக 470 புள்ளிகள் உட்பட மொத்தம் 7965 புள்ளிகளை சேகரித்து முதலிடத்தை பெற்றிருக்கிறார் சானியா மிர்சா.

இது குறித்த அதிகாரபூர்வ தரவரிசை பட்டியல் வெளியானது.

இதற்கு முன்னதாக, 1990களில் இரட்டையர் பிரிவில் லியாண்டர் பெயஸ், மகேஷ் பூபதி என ஆண்களே டொப் ரேங்கில் இடம்பிடித்திருந்தனர். ஆனால், வீராங்கனை ஒருவர் கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்று இவ்வாறு நம்பர் ஒன் சாதனையை நிகழ்த்தியிருப்பது இந்தியாவின் சானியா மிர்சாவே. இதுவரை இந்த இரண்டு ஜோடிகளும் விளையாடியுள்ள 14 போட்டிகளில் 3 போட்டிகளில் மட்டுமே தோல்வியடைந்துள்ளதால் சானியா–ஹிங்கிஸ் ஜோடி ராசியான ஜோடியாக ரசிகர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது.

## பெற்றோர் உருவத்தை பச்சை குத்திய வீரர்



ஐபிஎல் தொடரில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியில் இளம் வீரரான சூர்ய குமார் யாதவ் விளையாடி வருகிறார். இவர் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான முதல் போட்டியில், 5 சிக்சர், ஒரு பவுண்டரியுடன் 20 பந்துகளில் 46 ஓட்டங்களை குவித்து வெற்றிக்கு உதவினார். சூர்யகுமாரின் திறமையை கண்டு வியந்த அணி நிர்வாகம் அவருக்கு உதவி அணித்தலைவர் பொறுப்பு வழங்கியுள்ளது. இவரது பெற்றோர் அசோக்-சப்னா, சூர்ய குமாரின் கிரிக்கெட் வாழ்க்கைக்கு மிகவும் உறுதுணையாக உள்ளனர். சூர்ய குமாரும் தனது பெற்றோர்கள் மீது மிகுந்த அன்பு வைத்துள்ளார்.

இந்நிலையில் சூர்ய குமார் தனது பெற்றோருக்கு நன்றி செலுத்தும் வகையில் அவர்களது உருவங்களை தனது வலது கையில் பச்சை குத்தி உள்ளார். முதலில் அவர் தனது வலது கையில் தனது பெற்றோர்களின் பெயரை தான் பச்சை குத்தி இருந்தார். இது பற்றி அவர் கூறுகையில், இது தனது பெற்றோர்களுக்கு செய்யும் மரியாதை என்றும், எப்போதும் அவர்களை நினைவுகூர்ந்து கொள்ளவே பச்சை குத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

# உலகச் செய்திகள்

WORLD WATCH

## 2045ம் ஆண்டில் வேற்றுகிரகவாசிகள் பற்றி அறிந்து கொள்ளலாம் - நாசா



வேற்றுகிரகவாசிகள் குறித்து 2045ம் ஆண்டில் அறிவிக்கப்படும் என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பூமிக்கு அருகாமையில் அண்டவெளியில் உள்ள வேற்றுக்கிரகங்களில் வாழ்ந்து வரும் உயிர்கள் குறித்து 2045ஆம் ஆண்டளவில் மிக துல்லியமாக உறுதிப்படுத்த முடியும் என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 10 வருட காலப்பகுதியினில் உயிர்வாழ் இனம் குறித்து தகவல்களை பெற முடியும் என்ற போதிலும் உறுதியான ஆதாரபூர்வமான வகையில் தகவல்களை 2045ஆம் ஆண்டளவிலேயே பெற முடியும் என நாசாவின் தலைமை விஞ்ஞானி எலன் ஸ்ரோபன் (Ellen Srophen) தெரிவித்துள்ளார். தற்போதைய அதி நவீன தொழில்நுட்ப உதவியுடன் எமது ஆராய்ச்சி உரிய வழியில் வெற்றி நோக்கி செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அல்கொய்தா தலைவரை பலிவாங்கிய ஆளில்லா விமானம்



அமெரிக்கா நடத்திய குண்டுவீச்சில் அல்கொய்தா அமைப்பின் தலைவர் அல்-ருபைஷ் பலியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏமனில் அல்கொய்தாவின் 'பலம் அதிகரித்து வருவதால், அவர்களை அழிக்க அமெரிக்கா ஆளில்லா விமானங்கள் மூலம் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஏமனின் தென் கிழக்கு பகுதியில் உள்ள ஹட்ரமாவ்த் (Hatmath) மாகாணத்தில் அரேபிய தீபகற்பத்துக்கான அல்கொய்தா தலைவர் இப்ராகிம் ருபைஷ் (Ibra him al-Rubeish Age-35) செல்வதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் அங்கு குண்டு வீசி தாக்கின. இதில் இப்ராகிம், அல்-ருபைஷ் உள்ளிட்ட 6 பேர் உயிரிழந்தனர். இந்த தகவலை அரேபிய தீபகற்பத்தின் அல்கொய்தா பிரிவு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## மூதாட்டியை கொன்ற மரத்திற்காக இழப்பீடு - பிரான்ஸ்



பிரான்ஸ் நாட்டில் மரம் ஒன்று சாய்ந்து விழுந்ததில் பலியான மூதாட்டி ஒருவருக்கு பிரான்ஸ் அரசு 01 லட்சம் யூரோக்களை இழப்பீடாக வழங்கியுள்ளது. பிரான்ஸ் நாட்டில் உள்ள Hiers-Brouage நகரில் பல வருடங்களுக்கு முன் மாவீரன் நெப்போலியனின் மகனை கௌரவிக்கும் வகையில் மரக்கன்று ஒன்று 200 வருடங்களுக்கு முன் நடப்பட்டது. பல வருடங்களுக்கு பிறகு இந்த மரம் வளர்ந்து பழமையாகி புகழ்பெற்றதால், அந்த பகுதிக்கு எண்ணற்ற வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருவது வாடிக்கையானது.

இந்நிலையில், கடந்த 2007 ஆம் ஆண்டு பிரித்தானியாவை சேர்ந்த Carolyn Thor pe (62) என்ற பெண் தனது மகளான Sar ah Wright உடன் அந்த பகுதிக்கு சுற்றுலா சென்றுள்ளார். 200 வருட பழமையான மரத்தை சுற்றி வந்தபோது, அது திடீரென பெயர்ந்துக்கொண்டு சாய்ந்து அந்த மூதாட்டி மீது விழுந்தது. இதில் உடல் நசுங்கிய அவர் பரிதாபமாக பலியானார். இந்த சம்பவத்தில் அவரது மகள் காயங்களுடன் உயிர் தப்பினார்.

இந்த விபத்துக்கு இழப்பீடு தரவேண்டும் என வழக்கு போட்ட Carolyn Thorpe குடும்பத்தினர் கடந்த 07 வருடங்களாக போராடி வந்துள்ளனர். இதனிடையில், விபத்தில் இறந்த மூதாட்டிக்கு இழப்பீடாக சுமார் 77,000 யூரோக்களும், காயமடைந்த மகளுக்கு 42,000 யூரோக்களும் இழப்பீடாக Hiers-Brouage நகர நிர்வாகம் வழங்கியுள்ளது.

## வெள்ளை மாளிகை அருகே அனுமதியின்றி தரையிறங்கிய ஹெலிகொப்டர்

அமெரிக்காவின் தலைநகர் வோஷிங்டனில் வெள்ளை மாளிகை அருகே அனுமதியின்றி தரையிறங்கிய சிறு ரக ஹெலிகொப்டரால் பரபரப்பு ஏற்பட்டது. ஹெலிகொப்டரை ஓட்டி வந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள வெள்ளை மாளிகை உள்ள பகுதியான கேபிடோலின் மேற்கு பகுதியில் உள்ள புல்வெளியில் பிற்பகல் திடீரென ஒரு சிறிய ரக ஹெலிகொப்டர் தரையிறங்கியது.

இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அதிகாரிகள், உடனடியாக அந்த இடத்தை சுற்றி வளைத்து சோதனையிட்டனர். அதில் அபாயகரமான எந்த பொருளும் இல்லை என்பதை உறுதி செய்தபின்னர், ஒரே ஒரு நபர் பயணம் செய்யும் அந்த சிறிய ஹெலிகொப்டரில் வந்த டொக் ஹக்ஸ் (61) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

புளோரிடாவின் ரஸ்கின் பகுதியில் தபால் ஊழியராக பணியாற்றும் ஹக்ஸ், நிதி முறைகேடுகள் தொடர்பான தனது எதிர்ப்பை, ஒரே சமயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் வெளிப்படையாக தெரியப்படுத்தும் வகையில் ஹெலிகொப்டரில் வந்து இறங்கியதாக கூறியுள்ளார். இருப்பினும், தடை செய்யப்பட்ட பகுதிக்குள், வடஅமெரிக்க வான்வெளி பாதுகாப்பு மையத்தின் கண்காணிப்பையும் மீறி ஹெலிகொப்டரை அவர் ஓட்டி வந்தது கடும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

ஹக்ஸ் சிறு ரக ஹெலிகொப்டரில் வருவது கேபிடோல் பொலிசாருக்கு தெரியும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதற்கு முன் 2013ம் ஆண்டு ஒக்டோபர் மாதம், இதே போல் வெள்ளை மாளிகை அல்லது கேபிடோலில் சிறு ரக ஹெலிகொப்டரை தரையிறக்க திட்டமிடுவதாக கிடைத்த தகவலின்பேரில் அவரிடம்புலனாய்வுபிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்தியதாக உளவுப்பிரிவு கூறியுள்ளது.

இது ஒன்றும் ஆபத்தான விஷயம் இல்லை என்று கருதி அப்போது சாதாரணமாக விட்டுவிட்டனர். ஆனால், இப்போது அது பூதாகரமாக கிளம்பியுள்ளது. இரண்டு ஆண்டுகளாக வெளிப்படையாக இந்த ஹெலிகொப்டரை உருவாக்கிய ஹக்ஸ், அரசிடம் முறையான எந்த அனுமதியும் பெறாமல் வெள்ளை மாளிகை அருகே தரையிறக்கியது அதிகாரிகளை மட்டுமின்றி ஆட்சியாளர்களையும் உலுக்கியுள்ளது.

## லிபிய படகு விபத்தில் 400 பேர் பலி



லிபியா அருகே படகு கவிழ்ந்ததில் 400 பேர் பலியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. லிபியா பகுதியில் இருந்து புறப்பட்ட படகு ஒன்றில் சுமார் 540 பேர் வரை பயணம் செய்துள்ளனர். இத்தாலி நாட்டின் கடற்பகுதியில் படகு சென்று கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக கவிழ்ந்தது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற இத்தாலி கப்பல் படை வீரர்கள் சுமார் 140 பேர்களை மட்டும் உயிருடன் மீட்டனர்.

விபத்தில் இறந்து போனவர்களின் 9 உடல்கள் மீட்கப்பட்டுள்ளது. மாயமானவர்களை தேடும் பணி தீவிரமடைந்துள்ளது. மேலும் பலியானவர்களில் பெரும்பாலும் 18 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக இருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

## பெண்களை குறிவைக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ்




ஐ.எஸ் அமைப்பினர் பிரான்ஸில் இருக்கும் ஆண்களை விட பெண்களையே அதிகளவில் தங்கள் குழுவில் இணைத்து கொள்ள குறி வைப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பிரான்ஸில் கடந்த ஏப்ரல் 2014ல் நடந்த தாக்குதலை அடுத்து, சந்தேகிக்கப்படும் பயங்கரவாதம் பற்றி ரகசிய தகவலளிக்க ஹொட்லைனை அறிமுகப்படுத்தியது. இந்த ஹொட்லைன் மூலம் 3,640 தகவல்கள் வந்துள்ளதாகவும் அவற்றில் பெரும்பாலானவை பெற்றோர்களிடம் இருந்து வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அவர்கள், தங்கள் குழந்தைகள் ஐ.எஸ் அமைப்பில் சேருவதற்காக சிரியா மற்றும் ஈராக்கிற்கு செல்ல முயல்கிறார்களோ என்று சந்தேகம் உள்ளதாக கவலையுடன் தெரிவித்துள்ளனர். இதனை செவ்வாயன்று, பரிஸை சேர்ந்த பயங்கரவாத பகுப்பாய்வு மைய தலை வர் (Paris-based Center for the Analy sis of Terrorism) Jean-Charles Brisard செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இதுவரை ஆண்களை அதிகளவில் குறிவைத்து செயற்பட்ட ஐ.எஸ் அமைப்பினர், தற்போது பெண்களை பெருமளவில் குறிவைக்க தொடங்கியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த மார்ச் மாதம் வந்த ரகசிய தகவல்களின் எண்ணிக்கையின் படி, பெண்களில் 135 பேர் பற்றி சந்தேக தகவல்கள் வந்ததாகவும், ஆண்களில் 126 பேர் பற்றி மட்டுமே தகவல்கள் வந்ததாகவும் தெரிவித்துள்ளனர். இதுபற்றி மேலதிக தகவல்களை அதிகாரிகள் அறிவிக்காத நிலையில், இந்த தகவல்கள் ஐ.எஸ். அமைப்பினர் பெண்களை குறிவைத்து பிரச்சாரம் செய்ய தொடங்கியுள்ளதை தான் காட்டுவதாக நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.


கடந்த ஆண்டு இதே நேரத்தில் 43 சதவீத சந்தேக தகவல்கள் மட்டுமே பெண்கள் பற்றி வந்ததாகவும் தெரியவந்துள்ளது. Jean-Charles Brisard மேலும் கூறுகையில், ஐ.எஸ் அமைப்பின் இந்த பாலின அணுகுமுறை மாற்றத்தில் எந்த ஆச்சரியமும் இல்லை. பிரான்ஸில் உள்ள பெண்களில் பலர் மனிதாபிமான காரணங்களை . காட்டி ஐ.எஸ் அமைப்பில் சேர ஈர்க்கப்படுகின்றனர். மேலும், அவர்கள் பிரான்ஸ் மக்களிடம் பாதிக்கப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் புகைப்படங்களை காட்டி பிரச்சாரம் செய்கின்றனர். அந்த புகைப்படங்கள் ஆண்களை விட பெண்களை அதிகளவில் செயற்பட தூண்டுகிறது. பெண்கள் மீதான சந்தேக தகவல்களின் எண்ணிக்கை மட்டும் தான் அதிகளவில் உயர்ந்துள்ளது. ஆனால் பிரான்ஸில் இருந்து ஈராக் மற்றும் சிரியா சென்றுள்ள பெண்களின் எண்ணிக்கை 400 பேர்களில் 90 பேராக தான் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறு குறிவைக்கப்படும் பெண்களின் வயது 15 முதல் 25 வரை உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.


## நைஜீரியாவில் 2000 பெண்களை பாலியல் அடிமைகளாக்கிய அவலம்



நைஜீரியாவில் 2000க்கும் மேற்பட்ட பெண்களைபோகோஹராம்தீவிரவாதிகள் பாலியல் அடிமைகளாக்கியுள்ளதாக சர்வதேச மன்னிப்பு சபை அதிர்ச்சி தகவல்களை வெளியிட்டுள்ளது. கடந்தாண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி நைஜீரியாவின் சிபோக் (chebuk) நகரில் உள்ள பள்ளி ஒன்றில் நுழைந்த போகோ ஹராம் தீவிரவாதிகள், தேர்வு எழுதிக் கொண்டிருந்த 276 மாணவிகளை கடத்தி சென்றனர். மாணவிகள் கடத்தப்பட்ட ஓராண்டு ஆன நிலையிலும் அவர்களை பற்றி இன்னும் ஏதும் தகவல் இல்லை. தற்போது அவர்களை மீட்கும் பணியில் நைஜீரிய ராணுவம் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் கடத்தி செல்லபட்ட சிறுமிகள் பாலியல் அடிமைகளாகவும், தற்கொலை படை தீவிரவாதிகளாகவும் மாற்றப்படுவதாக சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கை வெளியிட்டு உள்ளது. இதுவரை தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகள் 2 ஆயிரத்துக்கும் மேல் இருப்பார்கள் என தெரிவிக்கப்பட்ட அந்த 90 பக்க அறிக்கையில், அதிர்ச்சி அளிக்கும் புகைப்படங்கள், புதிய சட்லைட் படங்கள் மற்றும் நைஜீரியா முழுவதும் தீவிரவாதிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் உள்ளிட்டவை சாட்சியாக காட்டப்பட்டு உள்ளது.






பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 6906182



# விந்தை உலகம்

## தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட அரண்மனையில் இளவரசரின் திருமணம்

புருனேய் (Brunei) நாட்டு மன்னர் தனது மகனின் திருமணத்தை தங்கத்தால் இழைக்கப்பட்ட அரண்மனையில், ஆடம்பரமாக நடத்தி உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளார். உலக பணக்கார குடும்பங்களில் ஒன்றான புருனேய் நாட்டு மன்னர், தனது 6வது மகனான அப்துல் மாலிக் (Abdul Malik-31) என்பவருக்கு திருமணம் நிச்சயித்திருந்தார். இதனை தொடர்ந்து புருனேய் தலைநகரில் உள்ள Istana Nural Iman அரண்மனையில், உலகமே வியக்கும் வகையில் ஆடம்பரமாக இந்த திருமணம் நடந்துள்ளது.

தங்கத்தால் இழைக்கப்பட்ட அரண்மனையின் மையத்தில் வைக்கப்பட்டிருந்த விசேஷ நாற்காலிகளை நோக்கி மணமக்கள் நடந்து வருகின்றனர். மேலும் வைரம், வைடூரியம், ரத்தின கற்கல், உள்ளிட்ட விலைமதிப்பற்ற ஆபரணங்களுடன் மணமகளான Haji Bolkiah(22) அரங்கிற்குள், வந்தார். மணமகள் அணிந்திருந்த வைரத்தால் செதுக்கப்பட்ட காலணிகள், காதணிகள் மற்றும் தங்க கொலுசுகள், விருந்தினர்களின் மனதை கொள்ளை அடிக்கும் விதமாக இருந்தது. இந்த திருமணத்தை அந்நாட்டு மன்னரான Hassanal Bolkiah, தனது மதச்சடங்குகளை உரிய முறையில் பின்பற்றி நடத்தி வைத்தார்.




## குழந்தைகளுக்காக கிட்னியை விற்கும் தந்தை



குஜராத் மாநிலத்தை சேர்ந்தவர் ரமேஷ்பாய் நந்த்வானா (34). கூலி தொழிலாளியான இவருக்கு மூன்று குழந்தைகள். முதல் பெண் குழந்தை யோகிதாவுக்கு 5 வயதாகின்றது. இவளது உடல் எடை 75 பவுண்ட், இரண்டாவது மகள் அனிஷாவுக்கு 3 வயது. இவளது உடல் எடை 105 பவுண்ட், ஒன்றரை வயதாகும் மூன்றாவது ஆண் குழந்தை ஹர்ஷின் எடை 35 பவுண்ட். இவர்கள் மூன்று பேரும் ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்கு வரக்கூடாத பிரேடர்-வில்லி ஸிண்ட்ரோம் என்ற கொடூரமான அதிகமாக பசி எடுக்கும் அகோரப்பசி நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாப்பிட்ட உணவு சிறிது நேரத்திற்குள் செரிமானமாகி, உடனடியாக இவர்கள் மூன்று பேரும் கோரஸாக 'அம்மா.., பசிக்குதே..,' பாட்டுப் பாட ஆரம்பித்து விடுவதால் இவர்களின் தாயார் பிராக்னா பென், எந்நேரமும் அடுப்படியே கதியாக இருந்து வருகிறார். கிடைக்கும் சொற்ப வருமானத்தை வைத்து கூலி தொழிலாளியான ரமேஷ்பாய் நந்த்வானாவால் இவர்களின் பசியை போக்க தீனி போட முடியவில்லை. எனவே, தனது இரு சீறுநீரகங்களில் ஒன்றை விற்று பிள்ளைகளின் அகோரப்பசி நோயை போக்கவும், உடல் பருமனை குறைக்கவும் ரமேஷ்பாய் நந்த்வானா முடிவு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 17 ஆண்டுகளுக்கு பின்பும் பாதுகாக்கப்படும் துறவியின் உடல்



சீனாவின் பௌத்த துறவியான வூ யுங்கிங், 17 வருடங்களுக்கு முன் மறைந்தபோதும் அவரது உடல் இன்று வரை கண்ணாடி பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவரது முக உறுப்புகளும், முகத்தில் உள்ள தசைகளும், தலைமுடி மற்றும் தாடியும் இப்போதும் எவ்வித சேதமுமின்றி அப்படியே உள்ளது. அவர் தற்போது 102 வயதுடன் வாழ்ந்துக்கொண்டிருப்பதாக அவரது பக்தர்கள் நம்புகின்றனர்.

மத்திய சீனாவின் அன்யாங் நகரில் உள்ள லிங்குவான் பௌத்த விகாரையில், தவக்கோலத்தில் அமர்ந்த நிலையில் உள்ள துறவி யூ யுங்கிங் தங்க அங்கியும், மணிகளும் அணிந்துள்ளார். யுங்கிங்கிற்கு 15 வயதிருக்கும் போது அவரது பெற்றோர் மரணமடைந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன. இதை தொடர்ந்து துறவியாக முடிவு செய்த யுங்கிங், ஷான்க்சி யனான் குயிங் ஹுவா விகாரைக்கு சென்றார்.

அங்கேயே இறுதி வரை இருந்த அவர், 1998 ஆம் ஆண்டில் மரணமடைந்தார். தங்களது குரு யுங்கிங்கின் உடலை பாதுகாக்க நினைத்த சீடர்கள், அவரது உடலை தாமரை நிலையில் வைத்து பெரிய பீங்கான் குவளையில் அடைத்தனர். பின்னர் அங்கிருந்து லிங்குவான் விகாரைக்கு கொண்டு வரப்பட்ட அவரது உடல், கண்ணாடி பேழையில் வைக்கப்பட்டது. ஏறத்தாழ 17 வருடங்களாக கண்ணாடி பேழைக்குள் இருக்கும் யுங்கின் முகம், இன்றும் சிதையாமல் இருப்பது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால் அங்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 1990 ஆம் ஆண்டிலிருந்து பௌத்த துறவிகளின் உடலை மம்மிகளாக பாதுகாத்து வரும் சூ குவோஷெங் இதுபற்றி கூறுகையில், துறவிகளை மம்மிகளாக பதப்படுத்தி வைத்திருப்பதற்கு பெரிய பீங்கான் குவளைகள் பெரிதும் உதவுகின்றன என்றார்.

## நெருப்பை கக்கும் மர்மமான குழி

சீனாவின் தென் பகுதியில் உள்ள மர்மமான குழியிலிருந்து தீ சுவாலைகள் வெளி வருவதை கண்டு அந்நாட்டு மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். சீனாவின் Xinjiang Uighur பகுதியில் உள்ள நிலப்பரப்பில் சுமார் 3 அடி அகலத்தில் மர்மமான முறையில் ஆழமான குழி ஒன்று உள்ளது. இதில் தொடர்ந்து நெருப்பை கக்கி வரும் தீ சுவாலைகளால், அப்பகுதி முழுவதும் வழக்கத்திற்கு மாறாக அதிக வெப்பமுடன் காணப்படுகிறது. தீக்குழியிலிருந்து வெளிவரும் வெப்பம் சுமார் 792 டிகிரி செல்சியஸாக உள்ளதால், அதற்கு அருகில் வைக்கப்படும் பொருளை எளிதில் தீப்பிடிக்க வைக்கிறது. அதேபோல், வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வதால், குழியின் ஆழத்தை கணக்கிட பூகோள விஞ்ஞானிகளால் அருகில் செல்ல முடியவில்லை.

இந்த குழியை தினந்தோறும் அச்சத்துடன் கண்டு வரும் உள்ளூர்வாசிகள், இது ஏதோ நரகத்திற்கு செல்லும் வழியாக இருக்குமா? என சந்தேகம் அடைந்துள்ளனர். அந்த பகுதியில் எரிமலைகள் இருந்ததற்கான சாத்திய கூறுகள் இல்லாததால், இந்த குழியை பற்றிய மர்மம் நீடித்தவாறே உள்ளது. இதுகுறித்து Fire Engineering Bureau துறையை சேர்ந்த Chen Long என்ற அதிகாரி கூறுகையில், சுமார் 1970ம் ஆண்டுகளில் இந்த பகுதி நிலக்கரியை வெட்டி எடுக்கும் சுரங்கமாக பயன்படுத்தப்பட்டது. ஆனால் நிலக்கரி தோண்டி எடுக்கும் பணி முடிவு பெற்றதும், அதிகாரிகள் இந்த பகுதியை முழுமையாக மூடாமல் விட்டுவிட்டதால், தற்போது பூமிக்கு அடியில் நிலக்கரி எரிந்து வருவதே இதற்கு காரணம் என தெரிவித்துள்ளார். எனினும் இந்த நெருப்புக்குழி குறித்து உறுதியான தகவல்கள் வெளியாகாத நிலையில், மர்மமான குழியை நேரடியாக காண நூற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.












email - vanni_inn@yahoo.com

Vanni Inn

Chinese, Indian, Sri Lankan Food available



Hotel Vanni Inn

A/C Room, Non A/C Room, Com Room, Quality Foods, Hall, Vehicle Parking

வவுனியா மண்ணில் நவீன வசதிகளுடன் கூடிய மங்கலகரமான அனைத்து நிகழ்வுகளுக்கும், மண்டபத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

2nd Cross Street, Vavuniya. Tel:- 0242222074, Fax:- 0242222074


இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 19.04.2015 அன்று வெளியிடப்பட்டது.